## அல்லாஹ்வின் கட்டளை

شَهۡرُ رَمَضَانَ الَّذِیۡۤ اُنۡزِلَ فِیۡهِ الۡقُرۡاٰنُ هُدًی لِّلنَّاسِ وَبَیِّنٰتٍ مِّنَ الۡهُدٰی وَالۡفُرۡقَانِ ۚ فَمَنۡ شَهِدَ مِنۡکُمُ الشَّهۡرَ فَلۡیَصُمۡهُ ؕ وَمَنۡ کَانَ مَرِیۡضًا اَوۡ عَلٰی سَفَرٍ فَعِدَّۃٌ مِّنۡ اَیَّامٍ اُخَرَ ؕ یُرِیۡدُ اللّٰهُ بِکُمُ الۡیُسۡرَ وَلَا یُرِیۡدُ بِکُمُ الۡعُسۡرَ ۫ وَلِتُکۡمِلُوا الۡعِدَّۃَ وَلِتُکَبِّرُوا اللّٰهَ عَلٰی مَا هَدٰىکُمۡ وَلَعَلَّکُمۡ تَشۡکُرُوۡنَ ﴿۱۸۶﴾

**பொருள் :** ஆனால், நோயாளியாகவோ பயணியாகவோ இருப்பவர்(விட்டுப்போன நோன்பை) மற்ற நாள்களில் கணக்கிட்டு (நோற்கவும்). அல்லாஹ் உங்களுக்கு எளிதை விரும்புகிறான். உங்களுக்குக் கடினத்தைத் தர)விரும்புவதில்லை. நீங்கள் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்காகவும், அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக நீங்கள் அவனைப் பெருமைப்படுத்துவதற்காகவும் நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவுமே (இந்தக் கட்டளையை அவன் பிறப்பித்துள்ளான்.)

(அல்பக்கரா : 186)


بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُهٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِهِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِهِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 8

இதழ் 13

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரி கமரி 1444 - ரமலான் 07 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - அமான் 30 ★ 30 மார்ச் 2023


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## நமது தலைவரும் எஜமானருமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய நாவிலிருந்து மக்களுக்கு வாக்குறுதியாக வழங்கப்பட்ட அந்த உண்மையாளர் நம்பிக்கைக்குரியவர் மற்றும் வாக்களிக்கப்பட்டவர் நானே ஆவேன்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

எனக்கு முழுமையாக நம்பிக்கை உள்ளது. எனது ஜமாஅத்தில் நயவஞ்சகம் இல்லை. என்னுடன் தொடர்பை ஏற்படுத்தக் கூடியவர்களிடம் அவர்களுடைய அகப்பார்வை தவறிழைக்கவில்லை. எனவே எவருடைய வருகைக் குறித்து ஈமானிய அகப்பார்வை சந்திப்பதற்கு கவனமூட்டியதோ அவர் உண்மையில் நானே ஆவேன். நமது தலைவரும் எஜமானருமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய நாவிலிருந்து மக்களுக்கு வாக்குறுதியாக வழங்கப்பட்ட அந்த உண்மையாளர் நம்பிக்கைக்குரியவர் மற்றும் வாக்களிக்கப்பட்டவர் நானே ஆவேன் என்பதற்கு இறைவன் சாட்சி ஆவான். ஆயினும், எவர் என்னுடன் தொடர்பை ஏற்படுத்தவில்லையோ அவர் இந்த அருட்கொடையிலிருந்து இழப்பிற்குரியவர் ஆவார். அகப்பார்வை என்பது ஒருவகையில் அற்புதம் ஆகும். நம்பிக்கையாளர் தனது நஃப்ஸின் மீது அகப்பார்வையைக் கொண்டு சவாரி செய்கின்றார். இறைவன் புறமிருந்து அவருக்கு ஒளி கிடைக்கின்றது. அதன் மூலம் அவர் நேர் வழி பெறுகின்றார். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நம்பிக்கையாளரின் அகப்பார்வைக்கு அஞ்சுங்கள். ஏனெனில் அவர் அல்லாஹ்வின் ஒளியைக் கொண்டு பார்க்கின்றார். சுருக்கமாக, எமது ஜமாஅத்தின் உண்மையான அகப்பார்வைக்கான மாபெரும் சான்று என்னவென்றால், அவர்கள் இறைவனின் ஒளியை அடையாளம் கண்டு கொண்டு விட்டனர்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 423, காதியான் பதிப்பு 2018)

## பொதுமக்களையும் சிறப்பானவர்களையும் தம் மீது மகிழ்ச்சி அடையச் செய்ய வேண்டும் மேலும் தமது கவிதைகளை அவர்கள் பாராட்ட வேண்டும் என்பதே கவிஞர்களின் நோக்கமும் எண்ணமும் ஆகும் ஆனால் முஹம்மது (ஸல்) அவர்களோ முழு உலகையும் தமது எதிரியாக்கிக் கொண்டார்கள். அப்படியிருக்க அன்னார் (ஸல்) எப்படி கவிஞராக இருக்க முடியும்?

وَالشُّعَرَآءُ یَتَّبِعُهُمُ الۡغَاوٗنَ ﴿۲۲۵﴾

اَلَمۡ تَرَ اَنَّهُمۡ فِیۡ کُلِّ وَادٍ یَّهِیۡمُوۡنَ ﴿۲۲۶﴾

وَاَنَّهُمۡ یَقُوۡلُوۡنَ مَا لَا یَفۡعَلُوۡنَ ﴿۲۲۷﴾

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு தஃப்ஸீர் வழங்கியவாறு கூறுகின்றார்கள்:

அடுத்து அல்லாஹ் اَلَمۡ تَرَ اَنَّهُمۡ فِیۡ کُلِّ وَادٍ یَّهِیۡمُوۡنَ ﴿۲۲۶﴾ என்று கூறுகின்றான். அதாவது, கவிஞர் பல்வேறு தரப்பட்ட மக்களை மகிழ்விப்பதற்காக சிலநேரம் ஒன்றை கூறிவிடுகின்றார். சிலநேரம் வேறொன்றை கூறிவிடுகின்றார் என்பதை நீங்கள் பார்ப்பதில்லையா? கவிஞர்களுக்கு முன்னால் எந்த சிறப்பிற்குரிய நோக்கமும் வாதமும் இருப்பதில்லை. இன்னும் கூறப்போனால் அவர்களின் மூளையில் என்னவெல்லாம் தோன்றுமோ அதனைப் பற்றியே ஏதாவது ஒன்றை கவிஞர்கள் கூறத் தொடங்கிவிடுகின்றனர். ஆக, நீங்கள் கவிஞர்களின் ஏதாவது கவிதைகளை எடுத்துக் கொள்ளுங்கள். அவற்றில் فِیۡ کُلِّ وَادٍ یَّهِیۡمُوۡنَ என்ற விஷயம் அவர்களின் எல்லா கவிதைகளிலும் தென்பட்டுவிடும். நான் மரணித்து விட்டேன். எனது காதலி என்னுடன் நன்றிகேடு காட்டுகின்றார். மேலும் நான் அவருடைய நகரத்தில் அவருடைய பாரா முகத்தின் காரணமாக உயிரை இழந்து கொண்டிருக்கின்றேன் என்று அவர் ஒரு கவிதையில் எழுதியிருப்பார். ஆனால் அத்துடன் அடுத்த கவிதையில் எனக்கு எனது காதலியின் சந்திப்பு கிடைத்து விட்டது. நான் உயிர்பெற்றுவிட்டேன். மேலும் நான் மீண்டும் உயிருடன் வந்து விட்டேன் என்று எழுதியிருப்பார். சுருக்கமாக, கவிஞர்களின் ஒவ்வொரு கவிதையும் ஒன்று மற்றொன்றுடன் முரண்படுகின்றது. அவர்களின் கூற்றுகளில் எந்தப் பொருத்தமும் இருப்பதில்லை. மக்களின் உணர்வுகளை அவை நல்ல வடிவில் அமைந்தாலும் சரி அல்லது தீய வடிவில் அமைந்தாலும் சரி அவற்றை கிளர்ந்தெழச் செய்வதே கவிஞர்களின் நோக்கமாக இருக்கின்றது. மேலும் அவர்கள் காடுகளில் சுற்றித் திரிகின்றனர். அவர்கள் எந்த ஒரு நோக்கத்திற்காகவும், வாதத்திற்காகவும் நிற்பதில்லை. ஆனால் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களோ உலகில் ஏகத்துவத்தை பரப்புவதற்காக தோன்றினார்கள். இந்த ஒரே நோக்கம் மட்டுமே இரவும் பகலும்

தொடர்ச்சி : 12-ம் பக்கம்

## நபிமொழி

**பாலூட்டிய தாய்க்கு மரியாதை**

ஹஸ்ரத் அபூ துஃபைல் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஜஃரானா என்ற இடத்தில் பார்த்தேன். அன்னார் (ஸல்) இறைச்சியை பங்கிட்டு கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு பெண்மணி வந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்காக தமது போர்வையை விரித்தார்கள். மேலும், அந்தப் பெண்மணி அதில் அமர்ந்து கொண்டார். ஹுஸூர் (ஸல்) அவர்கள் இந்த அளவிற்கு மரியாதை செலுத்துகின்றார்களே! இந்தப் பெண்மணி யார்? என்று நான் மக்களிடம் கேட்டேன். அவர் ஹுஸூர் (ஸல்) அவர்களுக்கு பாலூட்டிய தாய் ஆவார் என்று மக்கள் கூறினர்.

(அபூதாவூத், கிதாபுல் அதப்)

**தந்தையின் நண்பர்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்ளுதல்**

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தனது தந்தை மரணித்துவிட்ட நிலையிலோ அல்லது அவர் எங்காவது சென்றிருக்கும் நிலையிலோ மனிதன் தனது தந்தையின் நண்பர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது என்பது அவனுக்கு மிகச் சிறந்த நன்மையாக அமையும். (முஸ்லிம்: கிதாபுல் பரிய்யா வல் ஆதாப்)

**இளைய சகோதரன் மீது மூத்த சகோதரனுக்கு உள்ள உரிமை**

ஹஸ்ரத் ஸயீத் பின் ஆஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு தந்தைக்கு தனது பிள்ளைகளின் மீது உரிமை உள்ளதைபோன்று சிறிய சகோதரனின் மீது மூத்த சகோதரனுக்கு உரிமை உள்ளது. (அதாவது மூத்த சகோதரர் சிறிய சகோதரருக்கு தந்தையின் அந்தஸ்தில் இருக்கின்றார். அவருக்கு கண்ணியம் அளிப்பதும் மரியாதை செலுத்துவதும் இளைய சகோதரர் மீது கடமையாகும்) (முராஸீல் தாவூத், - ஹதீகத்துஸ் ஸாலிஹீன்- ஹதீஸ் எண்: 396-398, நூலாசிரியர். மதிப்பிற்குரிய மலிக் ஸைஃபுர் ரஹ்மான் ஸாஹிப்)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**நன்றியுணர்வு மற்றும் தூய்மை நிறைந்த பத்ர்ப் போர் ஸஹாபிகளான ஹஸ்ரத் ஆமிர் பின் ரபீஆஃ (ரலி), ஹஸ்ரத் ஹராம் பின் மில்ஹான் (ரலி), ஹஸ்ரத் ஸஅத் பின் கவ்லா (ரலி), ஹஸ்ரத் அபூ அல்ஹஸீம் பின் அத்தீஹான் (ரலி) ஹஸ்ரத் ஆஸிம் பின் ஸாபித் (ரலி), ஹஸ்ரத் ஸஹ்ல் பின் ஹு னைஃப் அன்ஸாரி (ரலி), ஹஸ்ரத் உமைர் பின் அபீ வகாஸ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் குத்பஃ பின் ஆமிர் (ரலி) ஆகியோரைப் பற்றிய சில அறிவிப்புகள்**

**பத்ர் வாசிகளுக்கு பத்ர் வாசிகளின் மீது மேன்மை வழங்கப்பட்டுள்ளது - (ஹஸ்ரத் அலீ (ரலி)அவர்கள்)**

**ஹஸ்ரத் ஹராம் (ரலி) அவர்கள் காயங்களிலிருந்து வெளியேறிய இரத்தத்தை கைகளில் ஏந்தினார்கள். மேலும் அதனை தமது முகத்தில் தடவியவாறு** اَللهُ اَكْبَرُ! فُزْتُ وَرَبِّ الْكَعْبَةِ **என்று கூறினார்கள்.**

**அல்லாஹு அக்பர்! கஃபாவின் ரப்பின் மீது ஆணையாக! நான் எனது நோக்கத்தை அடைந்துவிட்டேன்.**

**இந்த குத்பாவிற்கு பிறகு பத்ர்ப் போர் ஸஹாபிகள் தொடர்பாக நான் எடுத்துரைக்க விரும்பியிருந்த அந்த தொடர் நிறைவடைந்து விடும்**

**எதிர்ப்பு நிறைந்த சூழலை கருத்தில் கொண்டு பாகிஸ்தான், ஃபுர்கினாபாஸ்ᶠ மற்றும் அல்ஜீரியாவில் வசிக்கக் கூடிய அஹ்மதிகளுக்காக துஆக்கள் செய்வதற்கும் ஸதக்கா கொடுப்பதற்கும் அறிவுறுத்தல்**

**மதிப்பிற்குரிய முஹம்மது ரஷீத் ஸாஹிப் ஷஹீத் (குஜ்ராத் மாவட்டம்), இஸ்கன்தரூன், துருக்கியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அமானீ பஸ்ஸாம் மஜ்லாவீ ஸாஹிபா, அன்பிற்குரிய ஸலாஹ் அப்துல் முஅய்யின் குதைஷ் மற்றும் மதிப்பிற்குரிய மக்ஸூத் அஹ்மத் முனீப் ஸாஹிப் (குவைட்டா, பாகிஸ்தான் முரப்பி) ஆகியோரின் மரணத்தையொட்டி மர்ஹு ம்களின் நற்குறிப்புகள் மற்றும் ஜனாஸா காயிப் தொழுகை**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 24 பிப்ரவரி 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **தப்லீக்** மாதம் **24ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

பத்ர் போர் ஸஹாபிகளில் எவர்களின் நற்குறிப்பு முன்பு எடுத்துரைக்கப்பட்டிருந்தனவோ அவர்களைப் பற்றிய சில விஷயங்கள் விடுபட்டிருந்தன. அதை நான் கூறிக் கொண்டிருந்தேன். அந்த அடிப்படையில் இன்றும் கூறுவேன். இதற்குப் பிறகு நான் எடுத்துரைத்து வந்த பத்ர் போர் ஸஹாபிகள் தொடர்பான இந்தத் தொடர் நிறைவடைந்துவிடும்.

ஹஸ்ரத் ஆமிர் பின் ரபீஆ (ரலி) தொடர்பாக எழுதப்பட்டுள்ளது. அதாவது அன்னாருடைய தந்தை பெயர் ரபீஆ பின் காஆப் பின் மாலிக் பின் ரபீஆ ஆகும். அன்னாரிடமிருந்து சில அறிவுப்புகளும் கிடைக்கின்றன. அப்துல்லாஹ் பின் ஆமிர் பின் ரபீஆ தம்முடைய தாயார் ஹஸ்ரத் உம்மே அப்துல்லாஹ் லைலா பின்த் அபூ ஹஸ்மா அவர்களிடமிருந்து அறிவிப்பு செய்கின்றார்கள்: அதாவது அவர்கள் கூறுகின்றார்கள். நாங்கள் அபிஸீனியாவிற்கு பயணம் செல்லவிருந்தோம். மேலும் ஆமிர் பின் ரபீஆ அவர்கள் எங்களுடைய ஏதோ ஒரு வேலை தொடர்பாக எங்கோ சென்றிருந்தார்கள். அது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இணை வைப்பின் நிலையில் இருந்த காலமாகும். அன்னார் அப்போது அங்கு வந்து விட்டார்கள். மேலும் எனக்கு முன்பு நின்றார்கள். எங்களுக்கு அவர்கள் புறமிருந்து மிகவும் கடினங்களும், கஷ்டங்களும் தரப்பட்டிருந்தன. உம்மே அப்துல்லாஹ்வே! பயணம் மேற்கொண்டுள்ளீரா? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என்னிடம் கேட்டார்கள். அதற்கு, ஆம்! இறைவன் மீது ஆணையாக நாங்கள் அல்லாஹ்வின் பூமியில் செல்கின்றோம். எதுவரை என்றால் அல்லாஹ் எங்களுக்காக இதை விரிவாக்கி தருவான். நீங்கள் எங்களுக்கு மிகவும் கஷ்டத்தை தந்துள்ளீர்கள். எங்கள் மீது அதிக கடுமையை காண்பித்துள்ளீர்கள் என்று நான் கூறினேன். அப்போது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இறைவன் உங்களுடைய பாதுகாவலனாக இருப்பானாக!

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: நான் அந்த நாள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் குரலில் உருக்கத்தை பார்த்தேன். இதற்கு முன்பு இவ்வாறு நான் பார்த்ததில்லை. அதற்கு பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அங்கிருந்து சென்று விட்டார்கள். மேலும் நாங்கள் அங்கிருந்து வெளியேறுவது அன்னாருக்கு துன்பமாக இருந்தது.

அன்னார் கூறுகின்றார்கள்: அந்த தருணத்தில் ஹஸ்ரத் ஆமிர் (ரலி) அவர்கள் தம்முடைய வேலையை முடித்துவிட்டு திரும்பி வந்துவிட்டார்கள். அப்பொழுது, அபூ அப்தில்லாஹ்வே! நீங்கள் தற்போது உமர் (ரலி) அவர்களிடம் துக்கம் மற்றும் உருக்கத்தை கண்டீர்களா என்ன? என்று நான் கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் ஆமிர் (ரலி) அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: அவர் முஸ்லிமாக ஆகிவிட வேண்டும் என்று நீர் ஆசைப்படுகின்றீரா? அதற்கு நான் ஆம் என்று கூறியதாக அன்னார் கூறுகின்றார்கள். அப்போது, கத்தாபின் கழுதை முஸ்லிம் ஆகலாம். ஆனால், எந்த நபரை இப்பொழுது நீர் பார்த்தீரோ (அதாவது ஹஸ்ரத் உமர்) அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள மாட்டார் என்று ஹஸ்ரத் ஆமிர் (ரலி) கூறினார்கள்.

ஹஸ்ரத் லைலா (ரலி) கூறுகின்றார்கள்: இந்த விஷயம் ஹஸ்ரத் ஆமிர் (ரலி) அவர்கள் நம்பிக்கை இழந்ததன் காரணத்தினால் கூறியதாகும். மேலும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்நேரத்தில் வெளிப்படுத்திய இஸ்லாத்தின் மீதான எதிர்ப்பு மற்றும் கடினம் ஆகிய காரணங்களினால் அந்த நிலை உருவாகியிருந்தது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஆமிர் பின் ரபீஆ (ரலி) தம்முடைய தந்தையிடமிருந்து அறிவிப்பு செய்கின்றார்கள். அதாவது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நக்லா போருக்கு அனுப்பினார்கள். அதனுடைய பெயர் அப்துல்லாஹ் பின் ஜஹஷ் போர் என்பதுமாகும். பத்ர்ப் போருக்கு முன்னர் இந்தப் போரில் எங்களை அனுப்பினார்கள். மேலும், எங்களுடன் ஹஸ்ரத் அம்ர் பின் சுராக்கா அவர்களும் இருந்தார்கள். சுருங்கிய வயிறு கொண்டவரும், உயரமானவராகவும் அன்னார் இருந்தார்கள். வழியில் அன்னாருக்கு மிகவும் அதிக பசி எடுத்தது. அதன் காரணத்தினால் அன்னார் மிகவும் களைப்படைந்துவிட்டார்கள். மேலும், எங்களுடன் செல்வதற்கான சக்தி அவர்களுக்கு இல்லாமல் ஆகிவிட்டது. கீழே விழுந்தும்விட்டார்கள். பசியின் நிலை எவ்வாறானதாக இருந்தது என்றால், நாங்கள் ஒரு கல்லினுடைய துண்டை எடுத்து அன்னாருடைய வயிற்றில் வைத்து அன்னாருடைய இடுப்புடன் நன்கு இறுக்கி கட்டிவிட்டோம். அதன் பிறகு அன்னார் எங்களுடன் பயணிக்க ஆரம்பித்தார்கள். நாங்கள் ஒரு அரபு கோத்திரத்திடம் சென்றோம். அவர்கள் எங்களுக்கு விருந்து உபசரிப்பு செய்தனர். அதற்குப் பிறகு, அன்னார் எங்களுடன் நடக்க ஆரம்பித்தார்கள்.

மேலும், கூறினார்கள்: நான் புரிந்து வைத்திருந்தேன். மனிதனுடைய கால்கள் அவனுடைய வயிறை ஏந்தியவாறு செல்கின்றது. ஆனால், உண்மை என்னவென்றால் மனிதனுடைய வயிறுதான் அவனுடைய கால்களை எடுத்துக் கொண்டு செல்கின்றது. பசியின் நிலை இருக்கும்போதும், பட்டினியாக இருக்கும்போதும் மனிதன் பலவீனமாக ஆகிவிடுகின்றான். பின்னர், மனிதன் நடக்கக் கூட இயலாதவனாக ஆகிவிடுகின்றான்.

ஹஸ்ரத் அபூ உமாமா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு தருணத்தில் ஹஸ்ரத் ஆமிர் பின் ரபீஆ (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸஹல் பின் ஹனீஃப் ஆகியோரை உளவு பார்க்க அனுப்பினார்கள். ஹிஜ்ரி 8ல் ஸாதுஸ் ஸலாஸில் போரில் ஹஸ்ரத் ஆமிர் பின் ரபீஆ (ரலி) அவர்களும் கலந்து கொண்டார்கள். மேலும், அதில் அன்னாருக்கு கையில் அம்பு பட்டது. இதனால் அவர்கள் காயமுற்றார்கள். அப்துல்லாஹ் பின் ஆமிர் (ரலி) தம்முடைய தந்தை ஹஸ்ரத் ஆமிர் பின் ரபீஆ அவர்களிடமிருந்து அறிவிப்பு செய்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு மண்ணறையை கடந்து சென்றபோது இது யாருடைய கபர்? என்று கேட்டார்கள். இது இன்ன பெண்மணியின் கபர் ஆகும் என்று மக்கள் கூறினர். அப்பொழுது, நீங்கள் இவ்வாறு

ஒருபோதும் செய்யாதீர்கள்; உங்களுடைய ஜனாஸாவில் என்னை அழையுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பின்னர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகைக்காக ஸஃப்பை நிறுத்தினார்கள். அதாவது ஜனாஸா தொழுகைக்காக வரிசையில் நிற்கச் செய்தார்கள். பின்னர் அவருடைய ஜனாஸா தொழுகையை அங்கே கபருக்கு அருகில் தொழ வைத்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அறிவிக்கின்றார்கள்: அன்னாருடைய தந்தையார் ஹஸ்ரத் ஆமிர் பின் ரபீஆ (ரலி) அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள். எப்போதெல்லாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களை ஏதாவது ஒரு படையுடன் அனுப்புவார்களோ அப்பொழுது எங்களிடம் பயணப் பொருளாக ஒரு பேரீத்த பழத்தின் பெரிய பை மட்டுமே இருக்கும். படையினுடைய தளபதி எங்களுக்கிடையில் கையளவு பேரீத்தம் பழத்தை விநியோகம் செய்வார்கள். மேலும், சிறிது சிறிதாக ஒரு ஒரு பேரீத்தம் பழம் என்ற நிலையை அடைந்துவிடுவோம். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக அவையும் முடிந்து விடும். அப்பொழுது ஒரு நபருக்கு ஒரு பேரீத்தம் பழம் கிடைக்கும். ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) கூறுகின்றார்கள்: தந்தையே! ஒரு பேரீத்தம் பழம் எவ்வாறு போதுமானதாக இருக்கும்? வயிறு எவ்வாறு நிரம்பும்? என்று நான் கேட்டேன்.

அதற்கு, அன்பு மகனே! அவ்வாறு ஒருபோதும் கூறாதே! ஏனெனில், அதுவும் இல்லாமல் இருந்த தருணத்தில் தான் ஒரு பேரீத்தம் பழத்தின் மகத்துவம் என்ன? என்பது எங்களுக்கு தெரிந்தது. ஒரு பேரீத்தம் பழத்தின் மகத்துவம் என்ன? என்று பசியுடன் இருப்பவரிடம் கேட்டுப் பார்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தம்முடைய கிலாஃபத் காலகட்டத்தில் கைபர் பகுதியிலிருந்து யூதர்களை வெளியேற்றினார்கள். அப்பொழுது குறா பள்ளத்தாக்கின் நிலங்களை எவர்களுக்கெல்லாம் அன்னார் பிரித்து வழங்கினார்களோ அதில் ஹஸ்ரத் ஆமிர் பின் ரபீஆ (ரலி) அவர்களும் அடங்குவார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஜாபியா சென்றார்கள். அது டமாஸ்கஸின் அருகில் உள்ள ஓர் ஊராகும். ஹஸ்ரத் ஆமிர் (ரலி) அவர்கள் அன்னாருடன் இருந்தார்கள்.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் அதில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கொடி ஹஸ்ரத் ஆமிர் (ரலி) அவர்களிடம் இருந்தது. இதுபோன்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஜ் செய்வதற்காக சென்றபொழுது ஹஸ்ரத் ஆமிர் (ரலி) அவர்களை மதீனாவில் தம்முடைய பொறுப்பாளராக நியமித்திருந்தார்கள். உள்ளூர் தலைவராக நியமித்திருந்தார்கள்.

அன்னாருடைய மரணம் தொடர்பாக கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. சிலருடைய பார்வையில் அன்னாருடைய மரணம் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் நிகழ்ந்தது. சிலருடைய கூற்றின்படி 32 ஹிஜ்ரீயில் நிகழ்ந்தது. இருப்பினும், சிலருடைய பார்வையில் 33 ஹிஜ்ரீ என்று கருதப்படுகின்றது. சிலர் 36 ஹிஜ்ரீயில் மரணம் நிகழ்ந்ததாக கூறுகின்றனர். மேலும், சிலர் 37 ஹிஜ்ரி என்று கூறுகின்றனர்.

அல்லாமா இப்னு அஸாகிர் அவர்களின் கருத்துப்படி 32 ஹிஜ்ரி என்ற அறிவிப்பு மிகச் சரியானது ஆகும். அன்னாரின் மரணம் தொடர்பான அறிவிப்புகளில் கூறப்பட்டுள்ளது என்னவென்றால், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத்திற்குப் பிறகு அன்னார் தம்முடைய வீட்டிலேயே தங்கியிருந்தார்கள். எதுவரை என்றால் மக்களுக்கு அன்னார் தொடர்பாக எந்த செய்தியும் கிடைக்கப் பெறவில்லை. அன்னாருடைய ஜனாஸா வீட்டில் இருந்து கொண்டு செல்லப்பட்டது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஆமிர் தம்முடைய தந்தையார் ஹஸ்ரத் ஆமிர் பின் ரபீஆ (ரலி) அவர்களிடம் இருந்து அறிவிக்கின்றார்கள்: அதாவது ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களுடைய காலத்தில் ஒரு நபர் பனூ ஃபஸராவின் ஒரு பெண்ணை இரண்டு காலணிகள் மஹ்ர் தொகையாக நிர்ணயம் செய்து நிக்காஹ் செய்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருடைய நிக்காஹ்வை ஆகுமானது என்று அங்கீகாரம் வழங்கினார்கள். அதாவது குறைவாக நிர்ணயிக்கப்பட்டிருந்த அந்த மஹ்ர் தொகையும் ஆகுமானதாகும்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஆமிர் (ரலி) தம்முடைய தந்தையார் ஹஸ்ரத் ஆமிர் பின் ரபீஆ (ரலி) அவர்களிடமிருந்து அறிவிப்பு செய்கின்றார்கள்: அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பயணத்தின்போது தம்முடைய ஒட்டகத்தின் மேல் அமர்ந்தவாறு இரவில் நஃபில் தொழுததை அன்னார் (ரலி) கண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடைய ஒட்டகம் எந்தப் பக்கத்தை பார்த்தவாறு செல்கின்றதோ அந்தப் பக்கமே முகம் திருப்பி இருந்தார்கள்.

பயணத்தில் சவாரியின் முகம் எந்த பக்கமாக இருக்கின்றதோ அந்த பக்கமே முகம் திருப்பியவாறு தொழுவது ஆகுமானதாகும்.

ஹஸ்ரத் ஆமிர் பின் ரபீஆ (ரலி) அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஓர் இரவில் பயணம் மேற்கொண்டேன். நாங்கள் ஓரிடத்தில் இறங்கினோம். அப்பொழுது ஒரு நபர் கற்களை ஒன்று சேர்த்தார். மேலும் தொழுகைக்கான இடத்தை தயார் செய்தார். அதில் தொழுகையை நிறைவேற்றினோம். எங்களுடைய முகம் கிப்லா பக்கம் இருக்கவில்லை. மாறாக, எதிர் திசையில் இருந்தது என்பது எங்களுக்கு காலையில் தெரிந்தது. நாங்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் இரவில் கிப்லாவை விட்டுவிட்டு தொழுதுவிட்டோம் என்று கூறினோம்.

அப்போது, அன்னார் கூறினார்கள்: அல்லாஹ் இந்த வசனத்தை இறக்கியுள்ளான்.

وَلِلّٰهِ الْمَشْرِقُ وَالْمَغْرِبُ فَأَيْنَمَا تُوَلُّوْا فَثَمَّ وَجْهُ اللّٰهِ

கிழக்கும் மேற்கும் அல்லாஹ்விற்கே உரியனவாகும். எனவே, நீங்கள் எந்த பக்கம் முகம் திருப்புகின்றீர்களோ அங்கு அல்லாஹ்வை காண்பீர்கள். அதாவது தவறான புரிதலின் காரணத்தால் அந்த விஷயம் நிகழ்ந்தது என்றால் அதில் எவ்விதமான தவறும் இல்லை.

ஹஸ்ரத் ஆமிர் பின் ரபீஆ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னிடம் கூறியதாவது, இந்த வசனம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்னிடம் ஓதி காண்பித்து எனக்குப் புரிய வைப்பதற்காக கூறியதாக இருக்கலாம். அந்த தருணத்தில் இறங்கியது என்பது கட்டாயம் இல்லை. எவ்வாறு இருப்பினும், இது ஓர் அறிவிப்பாகும். இது ஹில்யதுல் அவ்லியாவில் உள்ளது.

ஹஸ்ரத் ஆமிர் பின் ரபீஆ (ரலி) அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என் மீது எவர் ஒரு முறை தரூத் ஓதுவாரோ அல்லாஹ் அவர் மீது 10 முறை அமைதியை இறக்குவான். ஆகையால் என் மீது குறைவான தரூத் அனுப்புவதா அல்லது அதிகமான முறை தரூத் அனுப்புவதா என்பது உங்களுடைய விருப்பமாகும். மேலும், ஓர் அறிவிப்பில் வந்துள்ளது. ஹஸ்ரத் ஆமிர் பின் ரபீஆ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த அடியார் என் மீது சாந்தி மற்றும் அமைதிக்கான துஆ செய்கின்றாரோ மேலும், எதுவரை அந்த நிலையில் இருக்கின்றாரோ வானவர்கள் அவருக்காக அமைதிக்கான துஆ செய்வார்கள். ஆகையால் அடியார் அதிகமான முறை சாந்தி சமாதானம் வேண்டி துஆ வேண்டுவதும், குறைவாக வேண்டுவதும் அவரது கட்டுப்பாட்டில் இருக்கின்றது.

இதற்குப் பிறகு அடுத்த குறிப்பு ஹஸ்ரத் ஹராம் பின் மில்ஹான் அவர்களுடையதாகும். ஹஸ்ரத் ஹராம் பின் மில்ஹான் அவர்களின் தலைமுறை பின்னர் தொடரவில்லை என்று வந்துள்ளது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபி தல்ஹா (ரலி) அவர்களிடமிருந்து அறிவிப்பு வருகின்றது. அன்னார் (ரலி) கூறினார்கள்: ஹஸ்ரத் அனஸ் (ரலி) என்னிடம் கூறினார்கள். அதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (அலை) அவர்கள் அன்னாருடைய மாமா ஹஸ்ரத் ஹராம் பின் மில்ஹான்; இவர் உம்மே சுலீம் அவர்களின் சகோதரர் ஆவார்கள். 70 சவாரிகளுடன் பனூ ஆமிரை நோக்கி சென்றார்கள். மேலும், ஆமிர் பின் துஃபைல் இணை வைப்பாளர்களின் தலைவன் ஆவான். அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்பு மூன்று விஷயங்களில் ஒன்றை ஏற்றுக் கொள்ளும்படி கூறினான். அவன் கூறினான்:

நகரவாசிகள் உங்களுடைய மக்கள் ஆவர். மேலும் கிராமவாசிகள் என்னுடைய மக்கள் ஆவர் அல்லது நான் உங்களுடைய மரணத்திற்குப் பிறகு உங்களுடைய பிரதிநிதியாவேன். அவ்வாறில்லையென்றால் நான் கத்ஃபான் கோத்திரத்தின் 2000 நபர்களை அழைத்துக் கொண்டு உங்கள் மீது தாக்குதல் தொடுப்பேன். ஆமிர் ஒரு பெண்ணின் வீட்டில் பிளேக் நோயால் பாதிக்கப்பட்டான். ஆலே ஸூலுலின் ஒரு பெண்ணுடைய வீட்டில் ஒட்டகத்திற்கு வந்த அதே கட்டிகளுடைய நோயாகும் என்று கூறியவாறு தன்னுடைய குதிரையின் முதுகிலேயே இறந்துவிட்டான். இறுதியில் அவனுடைய முடிவு இதுவாக இருந்தது. இது தொடர்பாக அன்னார் ஆரம்பத்திலேயே கூறியிருந்தார்கள். பின்னர், அறிவிப்பில் வந்துள்ளது. இந்த கோத்திரம் தொடர்பாகவும் கூறப்பட்டுள்ளது. அதாவது ஹஸ்ரத் உம்மே ஸலீமின் சகோதரர் ஹஸ்ரத் ஹராம் பின் மில்ஹான் கால் ஊனமுற்ற ஒரு நபர் ஆவார். மேலும், அந்தக் கோத்திரத்தைச் சேர்ந்த வேறொரு நபரை தன்னுடன் அழைத்துக் கொண்டு பனூ ஆமிரை சந்தித்தார். ஹராம் அவர்கள் அந்த இருவரிடமும் கூறினார்கள். நீங்கள் அருகில் இருங்கள். நான் அவர்களிடம் செல்கிறேன். ஒருவேளை அவர்கள் எனக்கு பாதுகாப்பு வழங்கினார்கள் என்றால் நீங்களும் வந்துவிடுங்கள். மேலும் ஒருவேளை அவர்கள் என்னை கொன்றுவிட்டார்கள் என்றால் நீங்கள் உங்களுடைய தோழர்களிடம் சென்று செய்தியை கூறிவிடுங்கள் என்று கூறினார்கள். மேலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியை உனக்கு கூறுவதற்காக எனக்கு நீ பாதுகாப்பு கொடுப்பாயா? என்று அன்னார் அவனிடம் கேட்டார்கள். இவ்வாறு அன்னார் தம்முடைய பேச்சை ஆரம்பித்தார்கள். கோத்திரத்தினுடைய மக்கள் ஒரு நபருக்கு சைகை செய்து காண்பித்தனர். அவன் அன்னாருக்கு பின்புறமாக வந்தான். மேலும் அவர்கள் மீது ஈட்டியினால் தாக்கினான். அது அன்னாருடைய உடலில் ஒரு புறத்திலிருந்து மறுபுறமாக வெளியேறியது. ஹஸ்ரத் ஹராம் (ரலி) அவர்கள் காயத்திலிருந்து வெளிவந்த இரத்தத்தை தம்முடைய கைகளில் எடுத்தார்கள். மேலும், தம்முடைய முகத்தில் தடவினார்கள். பின்னர்

اللهُ أَكْبَرُ! فُزْتُ وَرَبِّ الْكَعْبَةِ

என்று கூறினார்கள்.

பொருள்: அல்லாஹ் மிகப் பெரியவன். கஃபத்துல்லாஹ்வின் இறைவன் மீது ஆணையாக! நான் என்னுடைய நோக்கத்தில் வெற்றி அடைந்துவிட்டேன்.

பிறகு, அந்த மக்கள் மற்ற நபர்களுக்கு பின்னால் சென்றார்கள். மேலும், அவர்களையும் கொன்றுவிட்டார்கள். மேலும் மற்ற காரிகள் எனும் திருக்குர்ஆன் ஓதக்கூடிய மக்கள் மீதும் தாக்குதல் தொடுத்தனர். அவர்கள் அனைவருமே கொல்லப்பட்டார்கள். ஊனமுற்ற அந்த நபர் மட்டும் தப்பித்துவிட்டார். அவர் மலையின் உச்சிக்கு சென்றிருந்தார். அல்லாஹ் எங்கள் மீது எவ்வாறான விஷயத்தை இறக்கி இருந்தான்

என்றால், அவனுடைய நினைவுகள் நிலைபெற்றுவிட்டன. அதாவது எங்கள் புறமிருந்து எங்களுடைய சமுதாயத்திற்கு கூறிவிடுங்கள். நாங்கள் எங்களுடைய இறைவனை சந்தித்துவிட்டோம். அவன் எங்களிடம் மகிழ்ச்சி அடைந்துள்ளான். மேலும், எங்களையும் மகிழ்ச்சியடைச் செய்துவிட்டான்.

அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் 30 நாட்கள் ஒவ்வொரு காலையிலும் ரிஃல் ஸக்வான், பனூ லஹ்யான் மற்றும் உஸைய்யா ஆகிய கோத்திரத்தார்களுக்கு எதிராக துஆ செய்து கொண்டிருந்தார்கள்.

அவர்கள் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களுக்கு எதிராக கலகம் செய்தார்கள். இது புகாரியின் அறிவிப்பாகும்.

மேலும் ஓர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களிடமிருந்து அந்த அறிவிப்பு உள்ளது. இது புகாரியுடைய அறிவிப்பாகும். இந்த அடிப்படையில் அம்புக்கு பதிலாக அவர்களை ஈட்டியால் கொன்றார்கள். மேலும், மற்றோர் அறிவிப்பின் அடிப்படையில் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு மாதம் வரை காலை தொழுகையில் பனூ ஸலீமின் இரண்டு கோத்திரங்களான ரிஃல் மற்றும் ஸக்வானிற்கு எதிராக துஆ செய்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இதுதான் குனூத்தின் ஆரம்பமாகும். முன்பு நாங்கள் குனூத் செய்ததில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஹாஃபிழ்கள் எனும் திருக்குர்ஆன் மனனம் செய்தவர்களின் ஷஹாதத் சம்பவம் தொடர்பாக கூறும்போது ஸஹாபிகளின் தியாகத்தின் ஆர்வத்தை உதராணமாக குறிப்பிட்டவாறு கூறினார்கள். நமக்கு வரலாறு படிக்கும்பொழுது ஸஹாபிகள் போரில் எவ்வாறு சென்றார்கள்? என்பது தெரிய வருகின்றது. போரில் ஷஹீது ஆகுவது அவர்களுக்கு நிம்மதி மற்றும் மகிழ்ச்சிக்கும் எந்த அளவிற்கு காரணியாக இருந்தது என்பதும் நமக்கு தெரிய வருகின்றது. மேலும் போரில் அவர்களுக்கு ஏதாவது ஒரு கஷ்டம் ஏற்பட்டது என்றால், அதை அவர்கள் கஷ்டமாக எண்ணியதில்லை. மாறாக, மகிழ்ச்சியாக எண்ணினார்கள். ஆகையால் தான் வரலாற்றில் ஸஹாபிகளின் இவ்வாறான அதிகமான சம்பவங்கள் நமக்கு கிடைக்கின்றன. அதாவது அவர்கள் இறைவனுடைய வழியில் கொல்லப்படுவதை தங்களுக்கு நிம்மதி தரக்கூடியதாக நினைத்தார்கள். உதாரணமாக, ஹாஃபிழ்கள் எனும் திருக்குர்ஆன் மனனம் செய்திருந்த சில ஸஹாபிகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அரேபியாவின் மத்திய பகுதியில் ஒரு கோத்திரத்திற்கு தப்லீக் செய்வதற்காக அனுப்பினார்கள். அவர்களிடம் ஹராம் பின் மில்ஹான் அவர்கள் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை ஆமிர் கோத்திரத்தின் தலைவன் ஆமிர் பின் துஃபைலிடம் எடுத்துக் கூறினார்கள். மேலும், மற்ற ஸஹாபிகள் பின்னால் இருந்தார்கள். ஆரம்பத்தில் ஆமிர் பின் துஃபைல் என்பவனுடைய தோழர்கள் நயவஞ்சகமான முறையில் அவர்களை வரவேற்றனர். இருப்பினும், அவர்கள் அமைதியாக அமர்ந்து தப்லீக் செய்ய ஆரம்பித்த உடன் அவர்களில் சில தீயவர்கள் ஒரு அசுத்தமானவனுக்கு சைகை செய்தனர். மேலும் அவன் சைகை செய்ததை கண்டவுன் ஹராம் பின் மில்ஹான் அவர்கள் மீது பின்னால் இருந்து அம்பினால் தாக்கினான். அன்னார் கீழே விழுந்துவிட்டார்கள். விழுந்தவுடனேயே அன்னாருடைய நாவிலிருந்து தன்னை அறியாமல் மேலும் இயல்பாக

اللهُ أَكْبَرُ! فُزْتُ وَرَبِّ الْكَعْبَةِ

வரிகள் வெளிப்பட்டன.

அதாவது கஃபாவின் ரப்பின் மீது ஆணையாக! நான் வெற்றியடைந்துவிட்டேன்.

பின்னர், அந்த தீயவர்கள் மற்ற ஸஹாபிகளையும் சுற்றி வளைத்தனர். மேலும் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். அந்த தருணத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமை ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்கள் இருந்தார்கள். அன்னார் ஹிஜ்ரத் பயணத்தின் பொழுது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். அது தொடர்பாக வருகின்றது:

அன்னாரை கொலை செய்த அந்த கொலையாளி பிறகு முஸ்லிமாக மாறிவிட்டார். அவர் தாம் முஸ்லிமாக மாறியதன் காரணத்தை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார். நான் ஆமிர் பின் ஃபுஹைரா அவர்களை ஷஹீதாக்கினேன். அப்பொழுது அவர்களுடைய நாவில் இருந்து இயல்பாக வெளிப்பட்டது.

فُزْتُ وَاللهِ

அதாவது, இறைவன் மீது ஆணையாக! நான் என்னுடைய நோக்கத்தை அடைந்து விட்டேன். இந்த சம்பவங்கள் கூறுவது என்னவென்றால் ஸஹாபிகளுக்கு மரணம் துக்கத்திற்கு பகரமாக மகிழ்ச்சிக்கு காரணமாக இருந்தது.

அடுத்து, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நஜத் கோத்திரத்தின் சில மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள்.

அந்த விஷயத்தை விட்டுவிடுகின்றேன். அது தொடர்பான ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களுடைய ஆதாரத்தை முன்வைக்கின்றேன்.

அன்னார் (ரலி) இந்த சம்பவத்தை விரிவாக எடுத்துரைத்தவாறு சிறிது கூடுதல் விளக்கத்தை முன்வைத்தவாறு எழுதுகின்றார்கள்: ஒரு நபர் அபூ ஃபரா ஆமிரி அரபு நாட்டின் மத்திய பகுதியின் ஒரு கோத்திரம் பனூ ஆமிரின் ஒரு தலைவனாக இருந்தான். அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்திப்பதற்காக வந்தான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிக மென்மையாகவும், கருணையுடன் அவனுக்கு இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்தார்கள். மேலும், அவனும் வெளிப்படையாக ஆர்வம் மற்றும் கவனத்துடன் பெருமானார் (ஸல்) அவர்களுடைய உரையைக் கேட்டான். ஆனால், இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒரு விண்ணப்பம் வைத்தான். அதாவது, என்னுடன் உங்களுடைய சில தோழர்களை நஜத் கோத்திரத்திற்கு அனுப்பி வையுங்கள் என்றான். மேலும் அங்கு சென்று நஜத் வாசிகளுக்கு இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்கலாம். மேலும், நஜத் வாசிகள் உங்களுடைய அழைப்பை நிராகரிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது என்று அவன் கூறினான். நஜத் வாசிகள் மீது எனக்கு நம்பிக்கை இல்லை என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு, தாங்கள் ஒருபோதும் கவலைப்பட வேண்டாம். நான் அவர்களுடைய பாதுகாப்பிற்கான உத்திரவாதம் வழங்குகின்றேன் என்று அபூ பரா கூறினான். அபூ பரா ஒரு கோத்திரத்தின் தலைவனாகவும், செல்வாக்கு படைத்த மனிதனாகவும் இருந்தான். எனவே இதன் அடிப்படையில் அவனுடைய சமாதான வார்த்தைகள் மீது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நம்பிக்கை வைத்தார்கள். மேலும் ஸஹாபிகளின் ஒரு குழுவினரை நஜது கோத்திரத்தின் பக்கம் அனுப்பி வைத்தார்கள்.

இது வரலாற்றின் அறிவிப்பாகும். புகாரியில் வந்துள்ளது. அதாவது ரிஃல் மற்றும் ஸக்வான் கோத்திரம். இது பனூ ஸலீம் சமுதாயத்தின் கிளையாகும். அதனுடைய சில நபர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்பு ஆஜரானார்கள். மேலும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவாறு விண்ணப்பம் வைத்தார்கள். அதாவது எங்களுடைய சமுதாயத்தில் எவர்களெல்லாம் இஸ்லாத்தின் எதிரிகளாக இருக்கின்றார்களோ அவர்களுக்கு எதிராக எங்களின் உதவிக்காக சில நபர்களை அனுப்புங்கள் என்றனர்.

அதாவது தப்லீக் தொடர்பாகவா அல்லது படைத் தொடர்பாகவா என்ற விளக்கம் இல்லை.

இருப்பினும், அவர்கள் கூறினார்கள்: எங்களுடைய உதவிக்காக சில நபர்களை அனுப்பித் தாருங்கள்.

அதனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சிறு குழுவை அனுப்பினார்கள். இந்த இரண்டு அறிவிப்புகளையும் இணைக்கும்போது ஒரு சூழல் வெளிப்படுகின்றது. அதாவது ரிஃல் மற்றும் ஸக்வான் மக்களுடன் இணைந்து ஆமிர் கோத்திரத்தின் தலைவன் அபு பரா ஆமிரி என்பவனும் வந்திருந்தான். அவர்கள் சார்பாக அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பேசியிருந்தான். ஆகையால், வரலாற்றின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியது அதாவது எனக்கு நஜது வாசிகளிடமிருந்து சமாதானம் இல்லை என்று கூறியதும் மேலும் அதற்கு அவனுடைய பதில் தாங்கள் கவலைப்பட வேண்டாம்; நான் அவர்களுக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றேன். அதாவது உங்களுடைய தோழர்களுக்கு எந்த விதமான கஷ்டமும் ஏற்படாது என்று கூறிய விஷயங்களும் எதனை நிரூபிக்கின்றது என்றால், அபு பராவுடன் ரிஃல் மற்றும் ஸக்வான் மக்களும் வந்திருந்தார்கள். அதனால் தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கவலையுற்றார்கள். வல்லாஹு ஆலம். அல்லாஹ்வே நன்கறிவான்.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸஃபர் மாதம் ஹிஜ்ரி 4 ஆண்டில் முன்ஸிர் பின் அம்ர் அன்ஸாரி அவர்களின் தலைமையில் ஸஹாபிகளின் ஒரு குழுவை அனுப்பி வைத்தார்கள். அவர்கள் பொதுவாக அன்ஸார்களாக இருந்தார்கள். மேலும் எண்ணிக்கையில் 70 நபர்கள் இருந்தனர். மேலும், ஏறக்குறைய அனைவருமே காரீகள். அதாவது திருக்குர்ஆனை முறையாக ஓத அறிந்திருந்த நபர்கள். அவர்கள் பகல் நேரத்தில் காட்டிற்கு சென்று விறகுகளை ஒன்று திரட்டி அதன் மூலமாக தங்களுடைய உணவுக்கான ஏற்பாடு செய்பவர்கள். மேலும், இரவின் மிகப் பெரும் பகுதி இறைவணக்கத்தில் கழிப்பார்கள். எப்பொழுது இந்த நபர்கள் அந்த இடத்தை அடைந்தார்களோ அது ஒரு கிணற்றின் காரணத்தினால் பேரே மவூனா என்று பிரபல்யமடைந்திருந்தது. அவர்களில் ஒருவர் ஹராம் பின் மல்ஹான் ஆவார்கள். இவர் ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களின் மாமா ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புறமிருந்து இஸ்லாத்திற்கான தூதுச் செய்தியை ஆமிர் கோத்திரத்தின் தலைவர் மற்றும் அபு பரா ஆமிரியின் அண்ணன் மகன் ஆமிர் பின் துஃபைல் மற்றும் அவனுடைய தோழர்களிடம் சென்றார்கள். அப்பொழுது அவர்கள் ஆரம்பத்தில் நயவஞ்சகமாக வரவேற்றனர். ஆனால், அன்னார் சமாதானமாக அமர்ந்த உடன் மேலும் இஸ்லாத்தைக் குறித்து தப்லீக் செய்ய ஆரம்பித்த உடன் அவர்களில் சில கயவர்கள் ஒரு நபருக்கு சைகை செய்து அந்த பாவமறியா நபருக்கு பின்னால் இருந்து அம்பினால் தாக்குதல் நடத்தினர். அங்கேயே மாய்த்து விட்டனர். அந்த தருணத்தில் ஹராம் பின் மில்ஹான். அவர்களுடைய நாவில் இருந்து. اللهُ أَكْبَرُ! فُزْتُ وَرَبِّ الْكَعْبَةِ

என்ற சொற்கள் வெளிப்பட்டன.

அதாவது, அல்லாஹு அக்பர்! கஃபாவின் ரப்பின் மீது ஆணையாக! நான் என்னுடைய நோக்கத்தை அடைந்துவிட்டேன்.

ஆமிர் பின் துஃபைல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுவரை கொலை செய்ததுடன் நிறுத்தவில்லை. மாறாக, அதற்குப்

பிறகு தன்னுடைய கோத்திரமான பனூ ஆமிரை எஞ்சியிருந்த முஸ்லிம் கூட்டத்தினர் மீது தாக்குதல் தொடுக்குமாறு ஏவி விட்டான். ஆனால், அவர்கள் அதற்கு மறுப்பு தெரிவித்துவிட்டனர். மேலும், அபூபரா பொறுப்பேற்றிருக்கும் நிலையில் நாங்கள் முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்க மாட்டோம் என்று அவர்கள் கூறினர். அப்போது ஆமிர் சலீம் கோத்திரத்தின் பனூ ரிஃல், ஸக்வான், மற்றும் உஸைய்யா ஆகியவற்றிற்கு கட்டளையிட்டான். அதாவது, புகாரியின் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் குழுவாக வந்ததற்கு ஏற்றவாறு தன்னுடன் இணைத்துக் கொண்டு மேலும் இந்த அனைத்து மக்களும் முஸ்லிம்களின் இந்த சிறிய மற்றும் ஆதரவற்ற ஜமாஅத்தின் மீது தாக்குதல் நடத்தினர். அந்த காட்டுமிராண்டிகள் தங்கள் பக்கம் வருவதை பார்த்து அவர்களிடம் முஸ்லிம்கள் கூறினார்கள்: எங்களுக்கு உங்களுடன் எந்த சண்டையும் இல்லை. நாங்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஒரு பணிக்காக வந்திருக்கின்றோம். மேலும் நாங்கள் உங்களுடன் சண்டையிடுவதற்காக வரவில்லை. ஆனால், அவர்கள் எந்த பேச்சையுமே கேட்கவில்லை. மேலும் அனைவரையுமே வாளுக்கு இரையாக்கினர். அங்கிருந்த அந்த ஸஹாபிகளில் ஒரு நபர் மட்டுமே உயிர் பிழைத்தார். அவர் கால் ஊனமுற்றவராக இருந்தார். அவர் மலையின் உச்சியில் ஏறி இருந்தார். அந்த ஸஹாபியின் பெயர் காலப் பின் ஸைத் ஆகும். சில அறிவிப்புகளில் இருந்து தெரிய வருவது என்னவென்றால், நிராகரிப்பவர்கள் அவர் மீதும் தாக்குதல் தொடுத்தனர். இதனால் அவர் காயமுற்றார். மேலும் நிராகரிப்பாளர்கள் அவர் இறந்துவிட்டார் என்று எண்ணி சென்றுவிட்டார்கள். இருப்பினும் அவருடைய உடலில் உயிர் எஞ்சி இருந்தது. அவர் பிழைத்துவிட்டார்.

எவ்வாறு இருப்பினும், ஸஹாபிகளுடைய இந்த ஜமாஅத்தில் இரண்டு நபர்கள் அதாவது அம்ர் பின் உமைய்யா ஸம்ரி மற்றும் முன்ஸிர் பின் முஹம்மது இருந்தனர். இவர்கள் அப்பொழுது ஒட்டகங்களை மேய்ப்பதற்காக தங்களுடைய ஜமாஅத்திலிருந்து பிரிந்து இங்கும் அங்கும் சென்று இருந்தார்கள். அவர்கள் தூரத்திலிருந்து தங்களுடைய இருப்பிடத்தை பார்த்த பொழுது பறவைகளின் ஒரு கூட்டம் பறந்து கொண்டிருந்தது. அவர்கள் இந்த பாலைவன அடையாளங்களை நன்கு புரிந்தவர்களாக இருந்தனர். உடனடியாக புரிந்து விட்டார்கள். ஏதோ சண்டை நடந்திருக்கின்றது. திரும்பி வந்து பார்த்தபோது அநியாயக்காரர்களான நிராகரிப்பாளர்களுடைய கொலை வெறியாட்டம் அவர்கள் கண்முன் தென்பட்டது. தூரத்திலிருந்து இந்த விஷயத்தை பார்த்தவுடன், இப்பொழுது நாம் என்ன செய்ய வேண்டும்? என்று அவர்கள் தங்களுக்குள் ஆலோசனை செய்தார்கள். நாம் இங்கிருந்து தப்பித்துச் சென்றுவிட வேண்டும் என்று ஒருவர் கூறினார். மேலும் மதீனாவிற்கு சென்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு செய்தி கூற வேண்டும் என்றும் அவர் கூறினார். ஆனால் மற்றவர் அந்த ஆலோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் மற்றொருவர் கூறினார்: எங்கு நம்முடைய தலைவர் முன்ஸிர் பின் அம்ர் ஷஹீதாகி உள்ளார்களோ அந்த இடத்தில் இருந்து நான் ஒருபோதும் ஓடிச் செல்ல மாட்டேன். ஆகையால் அவர் முன்னேறிச் சென்று சண்டையிட்டார். ஷஹீதானார். மற்றொருவரின் பெயர் அம்ர் பின் உமையா ஸம்ரி ஆகும். அவரை நிராகரிப்பாளர்கள் பிடித்து கைதியாக்கி விட்டார்கள். மேலும் அவரையும் கொன்று இருப்பார்கள். ஆனால், அவர் முசிர் கோத்திரத்தை சார்ந்தவர் என்று அவர்களுக்கு தெரிந்தவுடன் ஆமிர் பின் துஃபைல் அரபு நாட்டினுடைய வழக்கத்தின் அடிப்படையில் அவருடைய நெற்றியின் சில முடியை மட்டும் வெட்டி அவரை விட்டுவிட்டான். மேலும் அவன் கூறினான்: என்னுடைய தாய் முஸிர் கோத்திரத்தின் ஒரு அடிமையை விடுதலை செய்வேன் என்று வேண்டுதல் செய்திருந்தார். நான் உன்னை அதற்கு பகரமாக விடுதலை செய்கின்றேன் என்றான். ஆக, அந்த 70 ஸஹாபிகளில் வெறும் இரண்டு பேர் மட்டுமே தப்பித்தார்கள். ஒன்று இவர். அதாவது அம்ர் பின் உமையா ஸம்ரி மற்றொருவர் காஆப் பின் ஸைத் . இவரை நிராகரிப்பாளர்கள் இறந்துவிட்டார் என்று எண்ணி விட்டு விட்டார்கள்.

பேரே மவ்வூனா சந்தர்ப்பத்தில் ஷஹீதான ஸஹாபிகளில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமை மற்றும் இஸ்லாத்தின் ஆரம்ப கால தியாகி ஆமிர் பின் ஃபுஹைரா அவர்களும் இருந்தார்கள். அன்னாரை ஜப்பார் பின் ஸல்மா என்பவர் கொலை செய்தார். பிற்காலத்தில் அவர் முஸ்லிம் ஆகிவிட்டார். மேலும் தான் முஸ்லிமாக மாறியதன் காரணத்தை எடுத்துக் கூறும்பொழுது கூறினார்: ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்களை நான் ஷஹீதாக்கியபோது அன்னாருடைய நாவில் இருந்து தன்னை அறியாமல் வெளிப்பட்ட வார்த்தை

اللهُ أَكْبَرُ! فُزْتُ وَرَبِّ الْكَعْبَةِ

அதாவது இறைவன் மீது ஆணையாக! நான் என்னுடைய நோக்கத்தை அடைந்துவிட்டேன். ஜப்பார் கூறுகின்றார்கள்: நான் இந்த சொற்களை கேட்டு மிகவும் வியப்படைந்தேன். அதாவது நான் இந்த நபரை கொன்றேன். ஆனால், நான் என்னுடைய நோக்கத்தை அடைந்து விட்டேன் என்று அவர் கூறுகின்றார். இது என்ன விஷயம்? என்று நான் வியந்தேன். எனவே நான் மக்களிடம் பின்னர் அதற்கான காரணத்தை வினவிய பொழுது, முஸ்லிம்கள் இறைவனுடைய வழியில் தமது உயிரை வழங்குவதை மிகப் பெரிய வெற்றியாக கருதுகின்றார்கள் என்பது எனக்கு தெரிய வந்தது. மேலும் இந்த விஷயம் எனது இயல்பில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அதாவது அதன் காரணத்தினால் இறுதியாக நான் முஸ்லிமாகிவிட்டேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தமது ஸஹாபிகளுடைய ரஜீஹ் மற்றும் பேரே மவ்வூனா சம்பவங்களின் செய்திகள் ஏறக்குறைய ஒரே நேரத்தில் கிடைத்தது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இதனால் கடினமான துக்கம் ஏற்பட்டது. அது எப்படிப்பட்டதாக இருந்தது என்றால் அறிவிப்புகளில் வருகின்றது: அது எவ்வாறான துக்கம் என்றால், இதற்கு முன்னர் அன்னாருக்கு இவ்வாறான துக்கம் ஏற்பட்டதில்லை. மேலும் அதற்குப் பிறகும் கூட ஏற்படவில்லை. உண்மையிலேயே சுமார் 80 ஸஹாபிகள் இவ்வாறு ஏமாற்றப்பட்டு திடீரென்று கொல்லப்படுதல் மேலும் அந்த ஸஹாபிகளும் எப்படிப்பட்டவர்களாக இருந்தார்கள் என்றால், அவர்களில் பெரும்பாலார் திருக்குர்ஆனை மனனம் செய்தவர்களாக இருந்தனர். மேலும் ஏழ்மையான தன்னலமற்ற நபர்களாக இருந்தனர். அரபு நாட்டின் மிருகத்தனமான சடங்கு சம்பிரதாயங்களை முன்னிறுத்தி பார்த்தோமேயானால் அது ஒரு சாதாரண சம்பவம் அல்ல. மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த செய்தி 80 மகன்களுடைய மரணத்தின் செய்தியை கேட்டதை போன்றதாகும். மாறாக, அதைவிட அதிகமானதாகும். ஏனெனில், ஆன்மிக மனிதருக்கு ஆன்மிக உறவு நிச்சயமாக மிக அதிகமான நேசத்திற்குரியதாக இருக்கின்றது. எந்த அளவிற்கு என்றால், ஓர் உலக வாதிக்கு உலக சொந்தம் மிக விருப்பத்திற்குரியதாக இருக்கின்றது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த அசம்பாவிதங்கள் மிக கடுமையான துக்கத்தை கொடுத்தன. இருப்பினும் இஸ்லாத்தில் எல்லா சூழலிலும் பொறுமைக்கான கட்டளை உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த செய்தியை கேட்டவுடன் இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன் என்று கூறினார்கள். மேலும்

هٰذَا عَمَلُ اَبِي بَرَاءٍ وَقَدْ كُنْتُ لِهٰذَا كَارِهًا مُتَخَوِّفًا

என்ற வார்த்தைகளை கூறி அமைதியாகிவிட்டார்கள். பொருள்: இது அபூபராவின் வேலையின் விளைவாகும். இல்லையென்றால் நான் இந்த மக்களை அனுப்புவதை விரும்பவில்லை. மேலும், நஜது வாசிகள் புறமிருந்து அச்சத்தை உணர்ந்திருந்தேன்.

அடுத்த நற்குறிப்பு, ஹஸ்ர் ஸஅத் பின் கவ்லா அவர்களுடையதாகும். அன்னாருடைய தொடர்பு பனூ மாலிக் பின் ஹசல் பின் ஆமிர் பின் லூயி கோத்திரத்தைச் சார்ந்ததாக இருந்தது. சிலருடைய பார்வையில் அன்னார் பனூ ஆமிருடைய சகோதர கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். அன்னார் பாரசீக வம்சத்தைச் சார்ந்தவராவார்கள். அன்னார் யமனில் குடி பெயர்ந்தவர் ஆவார்கள். ஆமிர் பின் ஸஅது தம்முடைய தந்தை ஸஅது பின் வகாஸ் அவர்களிடமிருந்து அறிவிப்பு செய்கின்றார்கள்: அதாவது அன்னார் (ரலி) கூறினார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஜ்ஜத்துல் விதா சந்தர்ப்பத்தில் என்னிடம் நலம் விசாரித்தார்கள். இந்த நோய் வாய்பட்ட தருணத்தில் நான் மரணத்திற்கு அருகில் சென்றுவிட்டேன். அப்போது, நான் இவ்வாறு வினவினேன்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னுடைய கஷ்டம் எந்த எல்லைக்கு சென்றுவிட்டது என்பதை தாங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். நான் செல்வந்தனாக இருக்கின்றேன். மேலும் என்னுடைய வாரிசாக என்னுடைய ஒரு மகளைத் தவிர வேறு யாருமில்லை. நான் என்னுடைய செல்வத்தில் மூன்றில் இரண்டு பங்கை ஸதக்கா செய்து விடட்டுமா? என்றேன். அதற்கு, வேண்டாம்! மூன்றில் ஒரு பகுதியை செய்யுங்கள். மூன்றாவது பகுதியும் அதிகமாகும் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். மேலும் உங்களுடைய வாரிசுகளை நல்ல நிலையில் விட்டுச் செல்லுங்கள். அது தேவையுடையவர்களாக மக்கள் முன்பு கையேந்தி திரியும்படி விட்டுச் செல்வதை விடச் சிறந்ததாகும். மேலும் நீங்கள் இறைவனுடைய விருப்பத்தை நாடியவாறு செலவு செய்தால் அதற்கான நற்கூலி வழங்கப்படும். எதுவரை என்றால், உங்களுடைய மனைவியின் வாயில் (இறை திருப்தியை நாடி நீர்) இடும் ஒரு கவளம் உணவுக்கான நற்கூலியும் வழங்கப்படும்.

கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் என்னுடைய தோழர்களிடமிருந்து பின்தங்கி விடுவேனா என்ன? அல்லது இங்கு நான் மறைந்துவிடுவேனா? என்று நான் வினவினேன். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் பின்தங்கிவிட மாட்டீர்கள். ஆனால் நீங்கள் என்ன நற்செயல்கள் செய்கின்றீர்களோ அதன் மூலமாக நீங்கள் அல்லாஹ்வின் திருப்தியை நாடுகின்றீர்கள் என்றால் நீங்கள் அதன் மூலமாக படித்தரம் மற்றும் உயர்வு அடிப்படையில் மேன்மை பெறுவீர்கள். நீங்கள் பின் தங்கி விடுவீர்கள் என்று அல்ல. அதாவது நீண்ட ஆயுள் வழங்கப்படுவீர்கள் என்றால் சமுதாயங்கள் உங்களிடமிருந்து பயனடையும். மேலும் சில ஏனைய நஷ்டங்களையும் நீங்கள் அடைவீர்கள்.

கூறினார்கள்: இறைவா! என்னுடைய ஸஹாபிகளின் ஹிஜரத்தை ஏற்றுக் கொள்வாயாக! மேலும், அவர்களை குதிகால்களை காண்பித்தவாறு செல்பவர்களாக ஆக்காதிருப்பாயாக!

ஆனால், ஸஅது பின் கவ்லா அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அன்னாருக்காக துக்கத்தை வெளிப்படுத்தினார்கள். ஏனெனில், அன்னார் ஹிஜரத்திற்கு பிறகு மக்காவிலேயே மரணமடைந்துவிட்டார்கள். ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்)

அவர்கள் ஸஅது பின் கவ்லா அவர்களுக்காக வருத்தத்தை வெளிப்படுத்தினார்கள். அதாவது அன்னார் மக்காவில் மரணமடைந்தார்கள். இது எதனால் என்றால், எவர் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்தாரோ அவர் திரும்பி செல்வது அல்லது அங்கு ஹஜ் மற்றும் உம்ரா செய்வதை விட அதிக நாட்கள் தங்குவதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விரும்பவில்லை.

இஸ்மாயீல் பின் முஹம்மது பின் ஸாது அவர்களிடமிருந்து அறிவிப்பு உள்ளது. அதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்கள் ஸாயிப் பின் உமைர் அல்காரி அவர்களுக்கு கட்டளை வழங்கினார்கள். அதாவது ஸஅது பின் கவ்லா அவர்கள் மக்காவில் மரணமடைந்தார்கள் என்றால், அவர்களை மக்காவில் அடக்கம் செய்ய வேண்டாம். மேலும் ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வகாஸ் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஒருவேளை இவர் மக்கவில் மரணமடைந்துவிட்டார் என்றால் மக்காவில் அடக்கம் செய்ய வேண்டாம். ஹஸ்ரத் ஸஅது பின் கவ்லா அவர்கள் ஹஜ்ஜத்துல் விதா தருணத்தில் மரணமடைந்துவிட்டார்கள். அவர்களுடைய மனைவி கர்ப்பிணியாக இருந்தார்கள். அன்னாருடைய மரணத்திற்கு பிறகு நீண்ட காலம் ஆகவில்லை. அதற்குள் அன்னாருடைய மனைவிக்கு பிரசவம் ஆனது. குழந்தை பிறக்கும் நேரமானது மரணத்திற்கு சிறிது நேரத்திற்கு பிறகு அமைந்திருந்தது. அதாவது அன்னாரின் மரணத்திற்கு பிறகு சிறிது நேரம் கழித்து குழந்தை பிறந்தது. அன்னார் (ரலி) தூய்மையானபோது நிக்காஹ்விற்கான அழைப்பு கொடுப்பதற்காக தன்னை அலங்கரித்துக் கொண்டார்கள்.

அவர்களுடன் பனீ அப்துத்தாரின் அதாவது அபு ஸனாபில் பின் பூகாகுன் என்ற ஒரு நபர் இருந்தார். என்ன விஷயம்? உன்னை அலங்கரித்தவாறு பார்க்கின்றேன். உனக்கு நிக்காஹ் செய்வதற்கான எண்ணம் உள்ளதா? என்று அவர் கேட்டார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! உன் மீது நான்கு மாதம் பத்து நாள் கழியும் வரை நீர் நிக்காஹ் செய்ய முடியாது என்று அவர் கூறினார்.

ஸூபைஅஃ கூறுகின்றார்: அந்த நபர் இந்த விஷயத்தை என்னிடம் கூறியபோது நான் அந்த மாலை நேரத்தில் உடை அணிந்தேன். மேலும் நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்றேன். மேலும் அது தொடர்பாக வினவினேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்)அவர்கள் எனக்கு தீர்ப்பு வழங்கினார்கள். அதாவது எனக்கு பிரசவம் ஆகிவிட்டது. ஆகையால் நிக்காஹ் எனக்கு ஹலால் ஆகிவிட்டது என்று கூறினார்கள். மேலும் நான் விரும்பினால் திருமணம் செய்து கொள்ளலாம் என்று எனக்கு வழிகாட்டல் வழங்கினார்கள்.

சில விவகாரம் தொடர்பாகவும் இதிலிருந்து நமக்கு தீர்வு கிடைக்கின்றது.

ஹஸ்ரத் அபுல் ஹஸீம் பினில் தைஹான் (ரலி) அவர்களைப் பற்றியதாகும். அன்னாருடைய சகோதரர் பெயர் ஹஸ்ரத் உபைத் பின் உபைத். ஹஸ்ரத் அத்தீக்கு பின்னில் தைஹான் ஆகும். இவர் உஹது போரில் கலந்து கொண்டார். ஹஸ்ரத் அபுல் ஹஸீம் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வினவினார்கள். ஓர் அறிவிப்பில் வருகிறது. அதாவது நான் முதன் முதலாக

## நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

பைஅத் செய்த நபராவேன். நாங்கள் எவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்வது என்றேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பனீ இஸ்ராயீல் சமுதாயத்தினர் மூஸாவிடம் எந்த விஷயத்தில் பைஅத் செய்தார்களோ அதன் அடிப்படையில் என்னிடம் பைஅத் செய்யுங்கள்.

ஹஸ்ரத் அபுல் ஹஸீம் மற்றும் உஸைது பின் ஹூஸைர் ஆகியோரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனி அப்துல் அஷ்அல் கோத்திரத்தாருக்கு தலைவராக நியமித்தார்கள். போரின்பொழுது அன்னார் இரண்டு வாள்களை தொங்க விடுவார்கள். அதன் காரணத்தினால் அன்னார் துஸ் ஸைஃபைன் என்றும் அழைக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: ஸஃபையின் போரின்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் தரப்பிலிருந்து அன்னார் போரிட்டார்கள். மேலும், ஷஹீத் ஆகிவிட்டார்கள்.

பின்னர், ஹஸ்ரத் ஆஸிம் பின் ஸாபித் (ரலி) அவர்களுடைய நற்குறிப்பு. ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்களின் ஒரு மகன் முஹம்மது ஆவார். இவர் ஹிந்து பின்த் மாலிக் அவர்கள் மூலமாக பிறந்தவராவார்

உஹது போரில் எந்த மக்கள் எல்லாம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அருகில் இருந்தார்களோ அவர்கள் தொடர்பாக ஒரு இடத்தில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களும் விளக்கியவாறு கூறியுள்ளார்கள்:

அதாவது ஹஸ்ரத் இமாம் ராஸி அவர்கள் 14 நபர்கள் தொடர்பாக உறுதியான சாட்சியம் பகர்ந்திருக்கின்றார்கள். அதாவது ஒவ்வொருவருடைய பெயரையும் கூறி இவர்கள் இருந்தார்கள் என்றார்கள். மேலும் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை விட்டு எந்தச் சூழலிலும் செல்லவில்லை. அந்த பெயர்களில் எவர்களுடைய பெயர்களெல்லாம் எழுதப்பட்டிருக்கின்றதோ அதில் முஹாஜிர்களில் ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் அலீ இருந்தார்கள். ஹஸ்ரத் அலி மட்டுமே இருந்தார்கள் என்று ஷியாக்கள் கூறுகின்றனர். ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர்(ரலி) ஹஸ்ரத் அலீ (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அஃப் (ரலி) இருந்தார்கள். மேலும், ஸஅது பின் அபீ வகாஸ்(ரலி), ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ், மற்றும் ஹஸ்ரத் அபூ உபைதா பின் அல்ஜராஹ் மற்றும் ஹஸ்ரத் ஸூபைர் பின் அவாம் (ரலி), ஆகியோரும் அடங்குவர். அன்ஸார் தரப்பில் ஹஸ்ரத் ஹூபாப் பின் முன்ஸிர் (ரலி), ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி), ஹஸ்ரத் ஆஸிம் பின் ஸாபித் ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஸமா ஆகியோர் ஆவர். ஹஸ்ரத் ஸஹல் பின் ஸாது பின் மஆஸ் போன்றோரும் அடங்குவர். மேலும் குறிப்பில் வருகின்றது. எட்டு நபர்கள் மரணத்தின் மீது சத்தியம் செய்து இருந்தார்கள். அதில் 3 பேர் முஹாஜிர்கள் ஆவர். மேலும் 5 பேர் அன்ஸார் சகோதரர்கள் ஆவர். மேலும் இதில் ஒரு வியப்பிற்குரிய விஷயம் என்னவென்றால், அவர்களில் ஒருவர் கூட ஷஹீதாகவில்லை. அல்லாஹ் அசாதாரண முறையில் அவர்களை பாதுகாத்துக் காட்டினான்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

அடுத்த நற்குறிப்பு, ஹஸ்ரத் ஸஹல் பின் ஹனீஃப் அன்ஸாரி(ரலி) அவர்களுடையதாகும். ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிப்பு உள்ளது. அதாவது பத்ர் போர் தருணத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் 100 ஒட்டகங்கள் மற்றும் 2 குதிரைகள் இருந்தன. அதில் ஒன்றின் மீது ஹஸ்ரத் மிக்தாத் பின் அஸ்வத் சவாரி செய்திருந்தார்கள். மற்றொன்றின் மீது ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் மற்றும் ஹஸ்ரத் ஸஹல் பின் ஹனீஃப் அன்ஸாரி (ரலி) சவாரி செய்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ஸஹாபிகள் வழியில் இந்த ஒட்டகங்களில் மாறி மாறி பயணம் மேற்கொண்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலி மற்றும் ஹஸ்ரத் முர்ஸத் பின் அபி முர்ஸத் கன்வி . இவர் ஹஸ்ரத் ஹம்ஸா பின் அப்துல் முத்தலிஃப் அவர்களின் தோழர் ஆவார். இவர்கள் அனைவரும் மாறி மாறி ஓர் ஒட்டகத்தில் சவாரி செய்தார்கள். உஹதில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அருகில் இருந்த நபர்களில் ஹஸ்ரத் ஸஹல் பின் ஹனீஃப் (ரலி) அவர்களுடைய குறிப்பு கிடைக்கின்றது.

யுஸைர் பின் அம்ரு அவர்களிடமிருந்து ஓர் அறிவிப்பு உள்ளது. அதாவது ஒருமுறை நான் ஹஸ்ரத் ஸஹல் பின் ஹனீஃப் அவர்களை சந்தித்தேன். மேலும், அவர்களிடம் வினவினேன். ஹரூரியா பிரிவு அதாவது, ஹாரிஜீகள் தொடர்பாக ஏதாவது ஒரு ஹதீஸ் கூறுங்கள் என்று கேட்டேன். அவர்கள் தொடர்பாக தாங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடமிருந்து கேட்டது குறித்து கூறும்படி கேட்டேன். அப்போது அன்னார் (ரலி) கூறினார்கள்: நான் உங்களிடம் இதை மட்டும் கூறுகின்றேன். அதாவது நான் என்ன கேட்டேனோ அதை விட அதிகமாக ஒன்றும் கூறமாட்டேன்.ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சமுதாயம் தொடர்பாக அது இங்கிருந்து வெளிப்படும் என்று கூறியதைக் கேட்டேன். மேலும், அன்னார் (ஸல்) ஈராக்கின் பக்கம் சைகை செய்து காண்பித்தார்கள். அந்த மக்கள் திருக்குர்ஆனை ஓதுவார்கள். ஆனால், அவர்களுடைய தொண்டைக்கு கீழ் அது இறங்காது. அந்த மக்கள் மார்க்கத்திலிருந்து எவ்வாறு வெளியேறி விடுவார்கள் என்றால் அம்பு இலக்கிலிருந்து எவ்வாறு தப்பி விடுகின்றதோ அதுபோன்று.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: நான் அன்னாரிடம் வினவினேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அடையாளம் ஏதாவது கூறியிருக்கின்றார்களா என்ன? என்று கேட்டேன். அதற்கு அன்னார் பதில் கூறினார்கள். நான் கேட்டது என்னவோ அதிலிருந்து சிறிதும் கூட அதிகமாக நான் கூறமாட்டேன். நான் என்ன கேட்டேனோ அதை உம்மிடம் கூறிவிட்டேன். இதிலிருந்து நீங்கள் கணித்துக் கொள்ளுங்கள்.

உமைர் பின் ஸயீத் அவர்களிடமிருந்து அறிவிப்பு உள்ளது. அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸஹல் பின் ஹனீஃப் அவர்களின் ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். மேலும், ஐந்து தக்பீர்கள் கூறினார்கள்: இது எவ்வாறான தக்பீராகும் என்று மக்கள் வினவினார்கள். அதற்கு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்: இவர் ஸஹல் பின் ஹனீஃப் ஆவார். பத்ர்ப் போர் ஸஹாபி ஆவார். அவர்களுடைய மகத்துவம் சம்பந்தமாக உங்களுக்கு விழிப்புணர்வு வழங்க வேண்டும் என்பதற்காக அதிகமான தக்பீர்கள் கூறினேன் என்றார்கள்.

பிறகு ஹஸ்ரத் ஜப்பார் பின் ஸஹர் (ரலி) அவர்களின் நற்குறிப்பு. பனூ தே கோத்திரத்துடன்

## திருக்குர்ஆனிலிருந்து...

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தலைமையில் ரபியுல் ஆகிர், ஹிஜ்ரீ 9 ஆண்டு போர் நிகழ்ந்தது. இது தொடர்பாக எழுதப்பட்டுள்ளதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ(ரலி) அவர்களுடன் 150 நபர்களை கொண்ட படையை பனூ தே கோத்திரத்தின் ஃபலஸ் எனும் சிலையை உடைப்பதற்காக அனுப்பி வைத்தார்கள். பனூ தே கோத்திரத்தின் பகுதி மதீனாவிலிருந்து வட மேற்கில் உள்ளது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த போருக்காக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கருப்பு நிறத்தில் ஒரு கொடியை கொடுத்தார்கள். மேலும் வெள்ளை நிறத்தில் ஒரு சிறிய கொடியும் கொடுக்கப்பட்டது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் காலை நேரத்தில் ஹத்தீம் வாசிகள் மீது தாக்குதல் தொடுத்தார்கள். மேலும் அவர்களுடைய ஃபலஸ் சிலையை அழித்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் பனூ தே கோத்திரத்திடமிருந்து மிக அதிகமான போர் செல்வங்களை எடுத்துக் கொண்டும், கைதிகளை அழைத்துக் கொண்டும் மதீனா திரும்பி வந்தார்கள். இந்தப் போரில் கொடி ஹஸ்ரத் ஜப்பார் பின் ஸஹர் (ரலி) அவர்களிடம் இருந்தது. இந்தப் போரின் போது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தம்முடைய தோழர்களிடம் ஆலோசனைக் கேட்டார்கள். அப்பொழுது ஹஸ்ரத் ஜப்பார் பின் ஸஹர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இரவில் நம்முடைய சவாரியில் நாம் பயணத்தை கழிப்போம். மேலும், காலையில் அவர்கள் மீது நாம் தாக்குதல் தொடுப்போம்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு அன்னாருடைய இந்த ஆலோசனை விரும்பத்தக்கதாக இருந்தது. ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிப்பு உள்ளது. அதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இடது பக்கத்தில் நான் நின்றிருந்தேன். அப்பொழுது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னை பிடித்து வலது பக்கத்தில் நிறுத்தினார்கள். பின்னர், ஹஸ்ரத் ஜப்பார் பின் ஸஹர் (ரலி) அவர்கள் வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்கள் இருவரையும் தங்களுக்கு பின்னால் நிறுத்தினார்கள். மேலும் ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் உமைர் பின் அபீ வகாஸ் (ரலி) அவர்களை அம்ர் பின் அப்தூத் என்பவன் ஷஹித் ஆக்கினான். மற்றோர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் உமைர் பின் அபீ வகாஸ் (ரலி) அவர்களை ஆஸ் பின் ஸயீத் ஷஹீதாக்கினான். தற்போது ஸஹர் சம்பந்தமான இந்த நற்குறிப்புகள் முடிந்துவிட்டன.

ஹஸ்ரத் உமைர் பின் அபீ வகாஸ் (ரலி) அவர்களுடைய நற்குறிப்பு. அன்னார் தொடர்பாக அறிவிப்பில் வருகின்றது. அதாவது இவை விடுபட்ட விஷயங்களாகும். அன்னாரை அம்ர் பின் அப்தூத் என்பவன் ஷஹீத் ஆக்கினான். மற்றோர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் உமைர் பின் அபீ வகாஸ் (ரலி) அவர்களை அஹஸன் பின் ஸயீத் என்பவன் ஷஹீதாக்கினான்.

அடுத்த நற்குறிப்பு, ஹஸ்ரத் குத்பஃ (ரலி) அவர்களுடையதாகும். ஓர் அறிவிப்பு உள்ளது. ஸஃபர் மாதம், ஹிஜ்ரீ 9 ஆண்டில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் குத்பாஃ (ரலி) அவர்களுடன் 20 நபர்களை, கஸம் கோத்திரத்தின் ஒரு கிளை கோத்திரம் தபாலாவின் சுற்று வட்டாரத்தில் இருந்தது; அங்கு அனுப்பினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரே முறையில் தாக்குதல் நடத்துங்கள் என்று கட்டளை வழங்கினார்கள். அந்த ஸஹாபிகள் பத்து ஒட்டகங்களில் சவாரி செய்தவாறு பயணம் மேற்கொண்டார்கள். அதனை மாறி மாறி பயன்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் ஒரு நபரை பிடித்தார்கள். அவனிடம் விசாரித்தபொழுது அவர்கள் முன்பு அவன் ஊமையாக ஆகிவிட்டான். மேலும் பிறகு சந்தர்ப்பம் கிடைத்தவுடன் சப்தமிட்டு சப்தமிட்டு தனது கோத்திரத்தாரை எச்சரித்தான். அப்போது அவனை அவர்கள் கொன்று விட்டார்கள். பிறகு குத்பஃ மற்றும் அவருடைய தோழர்கள் காத்திருந்தார்கள். மேலும் அந்த கோத்திரத்தார் உறங்கியபோது அவர்கள் மீது மீண்டும் தாக்குதல் நடத்தினார்கள். கடுமையான போர் நடைபெற்றது. இரண்டு தரப்பிலும் பலர் காயமுற்றார்கள். ஹஸ்ரத் குத்பஃ (ரலி) அவர்கள் பல மக்களைக் கொன்றார்கள். மேலும் அவர்களுடைய கால்நடைகள் ஆடுகள் மற்றும் பெண்களை மதீனாவிற்கு கொண்டு வந்தார்கள். கும்ஸ் என்ற பங்கு எடுக்கப்பட்ட பிறகு ஒரு பங்கில் நான்கு,நான்கு ஒட்டகங்கள் கிடைக்கப் பெற்றன. அப்போது ஓர் ஒட்டகம் 10 ஆடுகளுக்கு நிகராக இருந்தது.

இமாம் பக்வீ அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் குத்பஃ பின் ஆமிர் (ரலி) அவர்களிடமிருந்து எந்த அறிவிப்பும் அறிவிக்கப்படவில்லை.

எவ்வாறு இருப்பினும் நான் கூற விரும்பியிருந்த, இந்த ஸஹாபிகள் பற்றிய நற்குறிப்பு இங்கு நிறைவு பெற்றுவிட்டது.

இதன் பிறகு, ஒரு விஷயம் உள்ளது. அதாவது பாகிஸ்தான் அஹ்மதிகள் தொடர்பாக துஆவுக்காக நான் கூற விரும்புகின்றேன். அவர்கள் மீது நிலவும கடுமையான சூழலை அல்லாஹ் அங்கு எளிதாக ஆக்குவானாக. நீதியை நிலை நாட்டுபவர்கள், சட்டத்தை இயற்றுபவர்கள் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் பெயரில் அநீதி இழைப்பவர்களுக்கு அல்லாஹ் அறிவை வழங்குவானாக அல்லது அவர்களை பிடிப்பதற்கான ஏற்பாட்டை செய்வானாக. இரண்டாவதாக, ஃபுர்கினோபாஸ் அஹ்மதிகளுக்காக துஆ செய்யுங்கள். அங்கும் கடுமையான சூழல் நிலவுகிறது. இப்போதும் பயங்கரவாதிகள் கடுமையை விரும்புபவர்கள் அவர்களின் செயல்கள் அவ்வாறே உள்ளது. அல்லாஹ் மற்றும் ரஸூலின் பெயரில் அநீதி இழைக்கின்றனர். பின்னர் அல்ஜீரியாவின் மக்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அங்கும் சில அரசு அதிகாரிகள் அல்லது நீதிமன்றங்கள் இருக்கின்றன. தவறான விதத்தில் அநீதி இழைக்கின்றனர். அல்லாஹ் அனைவரையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக. குறிப்பாக துஆக்களின் மீதும் ஸதகாக்களின் மீதும் அதிக கவனமும் அழுத்தம் கொடுங்கள். அல்லாஹ் எதிரிகளின் தீங்கிலிருந்து ஒவ்வொருவரையும் பாதுகாப்பானாக.

அடுத்து, ஜுமுஆ தொழுகைக்கு பிறகு சில ஜனாஸா காயிப் தொழுகைகளை தொழ வைப்பேன். அவர்களைப் பற்றியும் கூறிவிடுகின்றேன். இங்கு முதலாவது நற்குறிப்பு, மதிப்பிற்குரிய முஹம்மது ரஷீது ஸாஹிப் பற்றியதாகும். அவர் கட்ரியாலா குஜ்ராத் மாவட்டம் சவ்த்ரி பஷாரத் அஹ்மது ஸாஹிப் அவர்களின் மகன் ஆவார்கள். அஹ்மதிய்யத்தின் இரண்டு எதிரிகள் அவருடைய வீட்டிற்கு வந்து பிப்ரவரி மாதம் 9 ஆம் தேதியன்று ஃபயரிங் செய்து அன்னாரை ஷஹீத் ஆக்கிவிட்டனர்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

ஷஹாதத்தின்போது அன்னாரின் வயது 70-ஐ விட அதிகமாக இருந்தது. தகவலின் அடிப்படையில் மதிப்பிற்குரிய முஹம்மது ரஷீது ஸாஹிப் குஜராத் மாவட்டம் கட்ரியாலாவிலுள்ள தமது வீட்டில் தனிமையில் இருந்தார்கள். அங்கு தமது பகுதி மக்களின் வசதிக்காக இலவச ஹோமியோபதி டிஸ்பன்ஸரியை நிறுவியிருந்தார்கள். அதிலிருந்து அந்தக் கிராமத்தின் மக்களும், அதன் சுற்றுப்புற மக்களும் பயனடைந்து வந்தனர். கிராமத்தின் இரண்டு உள்ளூர் இளைஞர்கள் மருந்து வாங்க வேண்டும் என்ற சாக்கில் அவருடைய வீட்டில் நிறுவப்பட்டிருந்த கிளினிக்கிற்குள் நுழைந்தார்கள். மேலும் ஃபயரிங் செய்து விட்டனர். தாக்குதல் நடத்தியவர் திருக்குர்ஆன் மனனம் செய்தவர் என்று கூறப்படுகிறது. அந்தத் தாக்குதலில் ஒரு குண்டு ஷஹீத் மர்ஹூம் அவர்களின் நெற்றியில் பாய்ந்தது. அதன் காரணமாக மதிப்பிற்குரிய முஹம்மது ரஷீது ஸாஹிப் அவர்களுடைய மரணம் நிகழ்விடத்திலேயே ஏற்பட்டு விட்டது. சம்பவத்திற்கு பிறகு தாக்குதல் நடத்தியவர்கள் தப்பி ஓடி விட்டனர்.

ஷஹீத் மர்ஹூம் அவர்களின் ஒரு பணியாள் சில நிமிடங்களுக்குப் பிறகு சம்பவ இடத்திற்கு வந்தபோதுதான் அந்த சம்பவம் குறித்து தகவல் கிடைத்தது. சம்பவம் தொடர்பான வழக்கு அப்பகுதி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்திய இருவரில் ஒருவருடைய உடல் அருகில் உள்ள வயலில் பிறகு கிடைத்ததாக கூறப்படுகிறது. அவர் திருக்குர்ஆன் ஹாஃபிழ் ஆவார்.

அவருடைய மரணம் தொடர்பாக தனிப்பட்ட விசாரணை நடைபெறுகின்றது. தாக்குதல் நடத்திய இரண்டாவது நபரை போலீஸ் தனது பிடியில் எடுத்துள்ள சம்பவமும் நடந்துள்ளது. ஷஹீத் மர்ஹூம் அவர்களின் குடும்பத்தில் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபி ஹஸ்ரத் முன்ஷி சுல்தான் ஆலம் ஸாஹிப் (ரலி) அவர்களின் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. அன்னார் கட்ரியாலா, குஜ்ராத் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஆவார். மேலும் உள்ளூர் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக இருந்தார்கள்.

கட்ரியாலாவிலிருந்து 1906 ஆம் ஆண்டு காதியான் சென்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய அருளுக்குரிய கரத்தில் பைஅத் செய்வதற்கான நற்பேறு அன்னாருக்கு கிடைத்தது. ஷஹீத் மர்ஹூம் மெட்ரிக் கல்விக்கு பிறகு ராணுவத்தில் இணைந்தார்கள். சில வருடங்களுக்குப் பிறகு ராணுவத்திலிருந்து விலகிவிட்டார்கள். சிறிது காலத்திறகுப் பிறகு 1984 -85-ல் குடும்பத்துடன் நார்வே நாட்டில் குடி பெயர்ந்துவிட்டார்கள். நார்வேயில் குடியுரிமை இருந்தும் கூட 2008-ல் நார்வேயிலிருந்து சொந்த ஊருக்கு திரும்பி சென்றுவிட்டார்கள். நார்வே சென்று வருவார்கள். சொந்த ஊரில் ஜமின்தாருடன் இணைந்து அப்பகுதி மக்களின் சேவைக்காக இலவச ஹோமியோபதி டிஸ்பன்ஸரி தொடங்கினார்கள். இச்சேவை இறுதி வரை தொடர்ந்தது. ஷஹீத் மர்ஹூம் அல்லாஹ்வின் அருளால் மூஸி ஆவார்கள். ஷஹாதத் நேரத்தில் கட்ரியாலாவின் இஸ்லாஹ் வ இர்ஷாத் செயலர் ஆக மர்ஹூம் தொண்டாற்றுவதற்கு நற்பேறு பெற்றிருந்தார்கள்.

நன்றாக பழகுபவராகவும், அன்பு செலுத்தக்கூடியவராகவும் இருந்தார்கள். அனைவரிடமும் நெருக்கமான நட்பு ரீதியிலான தொடர்பை வைத்து இருந்தார்கள். படைப்பினத்திற்கு தொண்டாற்றும் ஆர்வம் சிறப்பாக இருந்தது. எந்தவித மார்க்க வேறுபாடும் இன்றி தேவையுடையவர்களுக்கு பொருளாதார மற்றும் நல்லொழுக்க உதவிகளை அன்னார் செய்து வந்தார்கள்.

கிலாஃபத் மீது நேசம் இருந்தது. விருந்தோம்பல் பண்பு மிக உயரிய தரத்தில் அன்னாரிடம் இருந்தது. குறிப்பாக மேலிட விருந்தினர்களுக்கு சேவை செய்வதில் முன்னணியில் இருப்பார்கள். தொழுகைகளை பேணி வந்தார்கள். அப்பகுதியில் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் இலவச மருத்துவ முகாம்களுக்கான ஏற்பாடுகளை செய்து அதனை நடத்தி வந்தார்கள். அன்னாருடைய சகோதரர் மகனான ஜவரிகோஸ்டின் முரப்பி ராஃபி அஹ்மது அவர்கள் கூறுகின்றார்கள்: ஷஹீத் மர்ஹூம் அனைவரின் உள்ளத்தையும் கவரும் மனிதராக இருந்தார்கள். படைப்பின சேவையின் ஆர்வம் அதிகம் இருந்தது மட்டுமின்றி, இறை வழியில் சிறந்த உழைப்பாளியாகவும், ஏழைகளை பராமரிப்பவராகவும் இருந்தார்கள். அல்லாஹ் அன்னாருடைய கையில் ஷிஃபா (குணத்தை) வைத்திருந்தான். குத்பா ஜுமுஆக்களை தொடர்ந்து கேட்டு வந்தார்கள். மிகவும் கட்டுப்பட்டு நடக்கக்கூடியவர். சிலகாலம் முன்பு ஷஹீத் மர்ஹூம் அவர்களின் மனைவி பர்வீன் அக்தர் ஸாஹிபா நார்வேயில் ஒரு கனவைக் கண்டார்கள். ஷஹீத் மர்ஹூம் அவர்களின் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது.

ஒருவர் கொலை செய்வதற்கு முயற்சி செய்கின்றார். எவ்வாறு இருப்பினும், அவர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு கூறினார்கள். ஷஹீத் மர்ஹூம் குடும்பத்தில் மனைவி பர்வீன் அக்தர் ஸாஹிபா தற்போது நார்வேயில் வசித்து வருகின்றார்கள். இரண்டு மகன்கள், ஐந்து மகள்கள் உள்ளனர். இவர்களில் ஒரு மகள் பாகிஸ்தானில் இருக்கின்றார். மற்றவர்கள் பிற நாடுகளில் இருக்கின்றார்கள்.

நார்வேயின் முபல்லிக் இன்சார்ஜ் முஹம்மது காகிலூ ஸாஹிப் எழுதுகின்றார்கள்:

மிகவும் நல்ல இயல்பு கொண்டவராகவும் எளிமையான மனிதராகவும் மர்ஹூம் இருந்தார்கள். நார்வேயில் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் மக்களுக்கு தொண்டு செய்து வந்தார்கள். ஓய்வு பெற்ற பிறகு ஏறக்குறைய 12,13 வருடமாக பாகிஸ்தானில் தமது சொந்த ஊரில் வசித்து வந்தார்கள். மக்களுக்கு தொண்டும் செய்து வந்தார்கள். அந்த தருணத்தில் அவ்வப்போது நார்வேயும் வந்து செல்வார்கள்.

அன்னாருடைய மனைவி மர்ஹூமிற்கு அன்பிற்குரியவராக இருந்தார்கள். அவர் முதலில் பைஅத் செய்யவில்லை என்றாலும் தம் கணவருக்கு எதிர்ப்பை தெரிவிக்கவில்லை. இன்னும் கூறப்போனால், பிள்ளைகளின் திருமணமும் அஹ்மதிகளின் குடும்பங்களிலேயே நடைபெற்றது. இறுதியாக 2018 அக்டோபர் மாதம் வந்தபோது மனைவி பைஅத் செய்தார்கள். கூறுகின்றார்கள்: நான் மனைவியை பைஅத் செய்ய வைப்பதற்காகவே நார்வே வந்திருக்கின்றேன்.

கூறுகின்றார்கள்: அங்கு பாகிஸ்தானில் எதிர்ப்பு மிக அதிகமாக உள்ளது. மிரட்டல்களும் கொடுக்கப்படுகிறது. ஆனால் அங்கு ஏழ்மை அதிகமாக உள்ளது. மக்களால் மருந்து வாங்க முடிவதில்லை. என் மூலம் ஏழைகளுக்கு இலவச மருத்துவம் கிடைக்கின்றது. மேலும் அவர்களுக்கு உதவி செய்யப்படுகிறது. எனக்கு மரணத்தின் மீது அச்சமில்லை. அது ஒரு நாள் வரத்தான் போகிறது என்று மர்ஹூம் கூறினார்கள்.

இதன் பிறகும் அஹ்மதிகள் சேவை செய்கின்றார்கள். மனிதத்துவத்திற்கு தொண்டாற்றுகின்றார்கள். எந்த அச்சமுமின்றி செய்து வருகின்றார்கள். அல்லாஹ் மதிப்பிற்குரிய முஹம்மது ரஷீத் ஸாஹிப் அவர்களோடு மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் ஷஹீத் மர்ஹூம் குடும்பத்தாருக்கு பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவானாக.

இரண்டாவது அறிவிப்பு இரண்டு நபர்களுடையதாகும். மதிப்பிற்குரிய அமானீ பஸ்ஸாம் மஜ்லாவி ஸாஹிபா மற்றும் சிறுவர் ஸலாஹ் அப்துல் முஅய்யீன் குதைஷ் இஸ்கந்ரூன் அவர்களுடையதாகும். இவர்கள் துருக்கியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

முரப்பி மற்றும் சதர் ஜமாஅத் ஸாதிக் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: பிப்ரவரி மாதம் 6 ஆம் தேதி 2023 அன்று துருக்கியில் இரண்டு பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதில் இரண்டு அஹ்மதிகளும் மரணமடைந்திருக்கின்றனர். அவர்கள் தாய், மற்றும் மகன் ஆவர்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இது தவிர நிலநடுக்கத்தால் பொதுவாக அனைத்து அஹ்மதிகளும் அல்லாஹ்வின் அருளால் பாதுகாப்பாக உள்ளனர். சிலருக்கு சிறு, சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன. மரணமடைந்தவர்களில் ஒருவர் 23 வயதை உடைய சிரியாவைச் சேர்ந்த அஹ்மதிப் பெண் மதிப்பிற்குரிய அமானீ பஸ்ஸாம் மஜ்லாவி ஸாஹிபா இஸ்கந்தரூன் ஜமாஅத்தைச் சேர்ந்தவராவார்கள். இவர் அப்துல் முஅய்யீன் குதைஷ் ஸாஹிபின் மனைவி மற்றும் ஜமாஅத்தின் சதர் மதிப்பிற்குரிய ஸலாஹ் கதீஷ் அபு காலித் ஸாஹிபின் மருமகள் ஆவார்கள். அமானீ ஸாஹிபா இரண்டு மாதங்களுக்கு முன்பு தமது கணவருடன் பைஅத் செய்தார்கள். அன்னாரின் மாமனார் ஸலாஹ் குதைஷ் ஸாஹிப் கூறுகின்றார்கள். நிலநடுக்கத்திற்கு ஒருநாள் முன்பு அமானீ ஸாஹிபா அவர்களிடம் நீங்கள் பைஅத் செய்து விட்டதை உங்களுடைய வீட்டாருக்கு தெரிவித்துவிட்டீர்களா? என்று கேட்டேன். அப்போது அமானீ ஸாஹிபா அவர்கள் ஆம் தெரிவித்துவிட்டேன். இப்போது நான் எனது தாய் தந்தைக்கு நான் அஹ்மதியாகிவிட்ட தகவலை கொடுத்துவிட்டேன் என்றார்.

ஸலாஹ் ஸாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: அமானீ ஸாஹிபா அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டதால் தமது பெற்றோர்கள் எந்த எதிர்ப்பையும், எதிர்வினையும் தெரிவிக்கவில்லை என்பதில் மகிழ்ச்சியாக இருந்தார்கள். அவர்களுடன் மூன்று வயதை உடைய ஸலாஹுதீன் அவர்களும் மரணமடைந்தார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவர்கள் இருவரும் இடிபாடுகளுக்கிடையில் சிக்கிக் கொண்டனர். இரண்டு நாட்களுக்குப் பிறகு வெளியில் எடுக்கப்பட்டார்கள். அப்போது அவர்கள் மரணித்திருந்தனர். அமானீ ஸாஹிபா தமது கணவர் மதிப்பிற்குரிய முஅய்யின் குதைஷ் ஸாஹிப் மற்றும் 6 வயது மகள் உபைரா ஆகியோரை நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள்.

கபாபீர் முரப்பி ஷம்சுதீன் மலபாரி ஸாஹிப் கூறுகின்றார்கள்: அமானீ ஸாஹிபா மற்றும் அவருடைய கணவர் அப்துல் முஅய்யீன் குதைஷ் ஸாஹிப் அவர்களின் குடும்பம் சிரியாவில் இருந்து ஹிஜ்ரத் செய்து துருக்கி வந்தது. மிகவும் தூய்மையான சேவை செய்யக்கூடிய மற்றும் போதும் என்ற மனம் படைத்த பெண் ஆவார்கள். பைஅத் செய்வதின் முக்கியத்துவம் தெரிந்தவுடன் பைஅத் செய்வதில் தாமதம் செய்யவில்லை. மாறாக, தமது கணவர் மற்றும் சகோதரர்களுக்கு தன்னம்பிக்கையை வழங்கினார்கள்.

கூறுகின்றார்கள்: எனது மனைவி அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்கள் குறிப்பாக இதனை பார்த்துள்ளார்கள். மர்ஹூமா அவர்கள் தமது புகுந்த வீட்டில் அனைத்து நபர்களையும் தம்மோடு இணைத்து செல்வார்கள். மேலும் அனைவரிடமும் மிகவும் அன்பு நேசத்தின் நடைமுறை இருந்தது. பைஅத் செய்த தினந்தன்று மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். மேலும் எங்களை மிகவும் நல்ல முறையில் வழி அனுப்பி வைத்தார்கள்.

அல்லாஹ் அவர்களோடு மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

மூன்றாவது அறிவிப்பு, முரப்பி மக்ஸூத் அஹ்மது முனீஃப் ஸாஹிப் அவர்கள் பிப்ரவரி 15 அன்று மாரடைப்பின் காரணமாக 53 வது வயதில் மரணமடைந்தார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னாரின் ஜனாஸா தொழுகையை தொழ வைப்பனே.

அல்லாஹ்வின் அருளினால் அன்னார் வஸிய்யத் செய்திருந்தார்கள். அன்னாரின் தந்தை மதிப்பிற்குரிய சவ்த்ரி ஜான் முஹம்மது ஸாஹிப் அவர்கள் 1974 ஆண்டு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். 1991 -ல் ஜாமிஆ அஹ்மதிய்யா ரப்வாவில் முபஷ்ஷிர் பட்டம் பெற்று வெளியேறினார்கள். அதன் பிறகு, நஸாரத் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸியாவின் கீழ் பாகிஸ்தானின் பல்வேறு நகரங்களில் தொண்டாற்றும் வாய்ப்பை பெற்றார்கள். 1998 முதல் 2006 வரை கிழக்கு ஆஃப்ரிக்கா கென்யாவில் தொண்டாற்றும் நல்வாய்ப்பை பெற்றார்கள். அதன் பிறகு, பாகிஸ்தான் வந்துவிட்டார்கள். இன்றைய நாட்களில் குவைட்டா மாவட்ட முரப்பி என்ற ரீதியில் தொண்டாற்றி வந்தார்கள். அன்னாருடைய குடும்பத்தில் மனைவி மட்டுமின்றி ஒரு மகன் மற்றும் இரண்டு மகள்கள் உள்ளனர்.

நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: மிகவும் தூய்மையான நன்றியுணர்வுடன் பணியாற்றக் கூடிய கடும் உழைப்புடன் வேலை செய்கின்ற முரப்பியாக மர்ஹூம் திகழ்ந்தார்கள்.

குவைட்டாவின் முரப்பி அப்துல் வக்கீல் ஸாஹிப் எழுகின்றார்கள்: வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களை கண்ணியப்-படுத்துபவராக இருந்தார்கள். மர்ஹூம் அவர்களுக்கு எந்த விஷயம் தொடர்பாக தெரியாமல் இருந்ததோ எவ்வித தயக்கமும் இன்றி நான் அவரை விட வயதில் குறைந்தவனாக இருந்தபோதிலும் என்னிடம் கேட்டு அறிந்து கொள்வார்கள். அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் கென்யாவில் இருந்துள்ளார்கள். எப்போதும் அன்னாருடைய பேச்சில் கென்யாவை நினைவுகூருவார்கள். ஆக, கென்யாவின் மக்கள் அன்னாரின் உள்ளத்தில் இடம்பிடித்து விட்டார்கள். கென்யாவின் மக்கள் தூய்மையில் முன்னேறியவர்கள். மேலும் மிகவும் அன்பு செலுத்தக்கூடியவர்கள் என்று அன்னார் எப்போதும் கூறுவது உண்டு.

மஜ்லிஸின் காயித் ஃபரீத் ஸாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: மிகவும் தூய மனம் கொண்டவராகவும், தூய்மையான மார்க்க அர்ப்பணிப்பு கொண்டவராகவும், ஜமாஅத்திற்காக தம்மை தாமே அர்ப்பணித்துக் கொண்டவராகவும், கிலாஃபத்துடன் அளவில்லா அன்பு கொண்ட மனிதராகவும் அன்னார் இருந்தார்கள்.

கூறுகின்றார்கள்: மிகவும் சீனியர் முரப்பி இங்கு குவைட்டாவில் மாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள் என்று அறிந்தபோது மிகவும் மகிழ்ச்சிக்குள்ளானேன். குவைட்டா ஜமாஅத்திற்கு அதன் தேவை இருந்தது.

கூறுகின்றார்கள்: முதல் சந்திப்பிலேயே எனது உள்ளத்தை அவர் கவர்ந்துவிட்டார். குவைட்டா மாவட்டத்தின் பள்ளிவாசலில் முதல் குத்பா கொடுத்தபோது அதனை கேட்ட ஒவ்வொருவரும் அன்னாரை புகழ்ந்தார்கள். அதிக விருந்தோம்பல் செய்பவராக இருந்தார்கள். ஒவ்வொருவரையும் தமது வீட்டிற்கு வருமாறு அழைப்பு விடுப்பார்கள். நல்ல ரீதியில் சேவை செய்வார்கள். அவருடைய உள்ளத்தில் ஜமாஅத்திற்காக என்ன வேதனை இருந்ததோ அது அன்னாருடைய கண்களில் தென்படக்கூடியதாக இருந்தது. உரையாற்றும்போது மிகவும் உத்வேகத்துடன் மிக அழகான தொனியில் உரையாற்றுவார்கள். அதனை கேட்கின்றவர்களுடைய கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடும். கூட்டங்களிலும் சுற்றுப் பயணங்களிலும் சந்திக்கின்ற அனைவருடைய உள்ளத்திலும் ஜமாஅத்தின் மீது கவனம் ஏற்படுவதற்கான முழு முயற்சியை செய்வார்கள். அவர்களிடத்தில் ஜமாஅத் தொடர்பான ஞானத்தின் எல்லையில்லா கருவூலம் இருந்தது. பணிவு எந்த அளவுக்கு இருந்தது என்றால், இவ்வளவு பணிவான மனிதரை நான் எனது வாழ்க்கையில் பார்த்ததில்லை.

அடுத்து கூறுகின்றார்கள்: கடந்த ஜூமுஆவிற்கு அடுத்த நாள் அன்னாருடைய மரணம் நிகழ்ந்தது. கடந்த ஜூமுஆவில் அன்னாருடைய முகத்தில் ஒரு தனி விதமான பிரகாசம் இருந்தது. எனது பார்வை அவர் மீது விழுந்தது. அப்போது நான் நாஸிம் உமூமி அவர்களுக்கு முன்னால் முரப்பி ஸாஹிப் அவர்களிடம் இன்று நீங்கள் மிகவும் அழகாக இருக்கின்றீர்கள் என்று கூறினேன். அது அன்னாரின் கடைசி ஜூமுஆ என்று நாங்கள் அறிந்திருக்க வில்லை. அதன் பிறகு அவரின் மரணம் நிகழ்ந்தது. அல்லாஹ் அன்னாருடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும், அன்னாரின் பதவிகளை உயர்த்துவானாக.

இந்த மர்ஹூம்கள் அனைவரின் ஜனாஸா காயிப் தொழுகைகளையும் நான் இன்ஷாஅல்லாஹ் இப்போது தொழ வைப்பேன்.

தமிழாக்கம் : மவ்லவி M.ஷஹாபுதீன்

# ஜுமுஆ பேருரை

**முஸ்லிஹ் மவ்வூத் தினத்தையொட்டி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் அறிவுசார் சாதனைகளின் அழகிய குறிப்புகள் மற்றும் ஹுஸூர் (ரலி) அவர்களின் திருக்குர்ஆன் மொழியாக்கம், தஃப்ஸீருல் குர்ஆன் மற்றும் சில சொற்பொழிவுகளைக் குறித்த அந்நியர்களின் கருத்துகள்**

**வல்லமை, கருணை, இறை நெருக்கம் ஆகிய அடையாளங்கள் உமக்கு அருளப்படுகின்றன. அருள், பேரருள் ஆகிய அடையாளங்கள் உமக்கு வழங்கப்படுகின்றன. வெற்றி வாகையின் திறவுகோல் உமக்குக் கிடைக்கிறது.**

**வெற்றி பெற்றவரே! உம் மீது சாந்தி உண்டாவதாக**

**உமக்கு ஒரு நற்செய்தி! கம்பீரமான, தூய ஒரு மகன் உமக்கு வழங்கப்படுவார். ஒரு தூய மகன் உமக்குக் கிடைப்பார். அந்த மகன் உமது வித்திலிருந்தே உமது சந்ததியாக, வழித் தோன்றலாக இருப்பார்**

**இந்த மகன் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து அக மற்றும் புற ஞானங்களால் நிரம்பியிருத்தல், புத்திக்கூர்மை உள்ளவராகவும் நுண்ணிய அறிவுடையவராகவும் இருத்தல் மற்றும் பிற சிறப்புப் பண்புகளை உடையவராக இருத்தல் ஆகிய விஷயங்களை அவரது மக்களும் அந்நியர்களும் ஒப்புக் கொள்கிறார்கள்**

**முற்றிலும் ஒரு புதிய கோணத்தில் திருக்குர்ஆனைப் படிப்பதற்கான சிந்தனையை தாங்கள் உருவாக்கியுள்ளீர்கள் என்பதில் ஐயமில்லை. இந்த விளக்கவுரை தனது வகையைப் பொருத்தவரை முற்றிலும் முதல் விளக்கவுரையாகும். இதில் அறிவையும் நூல்களின் சான்றையும் மிக அழகிய முறையில் ஒன்றுபடுத்தியுள்ளீர்கள். தங்களது அறிவியல் புலமையும், விசாலமான பார்வையும், தங்களது அசாதாரண சிந்தனையும் நுண்ணறிவும் தாங்கள் சான்றளிக்கும் அழகும் அதன் ஒவ்வொரு சொல்லிருந்தும் மிகத் தெளிவாகத் தெரிகிறது**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 17 பிப்ரவரி 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **தப்லீக்** மாதம் **17ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

சென்ற இதழின் தொடர்ச்சி :

அடுத்து தஃப்ஸீரே ஸகீரைப் பற்றி அந்தப் பத்திரிகை கூறுகிறது: தற்போது தஃப்ஸீரே ஸகீர் பார்வையில் உள்ளது. இந்த தஃப்ஸீர் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர் மர்ஹூம் அல்ஹாஜ் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத்(ரலி) அவர்களின் சிந்தனை முயற்சியின் விளைவாகும். திருக்குர்ஆனின் அரபு வாக்கியங்களின் உருது மொழிபெயர்ப்புடன் பல இடங்களை விளக்குவதற்காக அடிக்குறிப்புகளும், விரிவான குறிப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பு மற்றும் அடிக்குறிப்புகளின் மொழி நடை மிகவும் சாதாரணமானதும், எளிமையாகப் புரியக் கூடியதுமாக உள்ளது.

அடுத்து, கிந்தீல் எனும் ஒரு பத்திரிகை இருந்தது. அது ஜூன் 19,1966 அன்று தனது இதழில் இவ்வாறு எழுதுகிறது: அஞ்சுமன் ஹிமாயத்தே இஸ்லாம் லாஹூர் மற்றும் தாஜ் கம்பெனி லிமிட்டெட் தரப்பிலிருந்து திருக்குர்ஆன் அச்சிடுவதில் காண்பிக்கப்பட்டு வந்த நல்லார்வம் பாராட்டத்தக்கது. பிறகு தஃப்ஸீரே ஸகீர் பற்றி கூறுகிறது:

தஃப்ஸீரே ஸகீரை வெளியிட்டதால் அந்த ஆத்மார்த்தமான முயற்சி மேம்பட்டுள்ளது. தஃப்ஸீரே ஸகீரில் மொழிபெயர்ப்பு மற்றும் விளக்கவுரை, அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் அவர்களுடைய முயற்சியின் விளைவாகும். எல்லா அறிவுத்திறன் உள்ளவர்களும் அதிலிருந்து பயன் பெறும் பொருட்டு அதன் மொழிபெயர்ப்பு மற்றும் அடிக்குறிப்பின் மொழி நடை எளிமையாகப் புரியக் கூடியதாக உள்ளது. மொழியாக்கம் மற்றும் விளக்கவுரையில் இந்த விஷயமும் கடைபிடிக்கப்பட்டுள்ளது. அதாவது, முன்சென்ற அனைத்து திருக்குர்ஆனின் விரிவுரையாளர்களின் விரிவுரைகளும் கடைசி வரை கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

அடுத்து கூறுகிறது: திருக்குர்ஆனை இவ்வளவு அழகாக அச்சடித்து வெளியிடுவது இஸ்லாத்திற்கு செய்யும் மாபெரும் சேவையாகும்.

இதில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது; அதனால் தான் இது தடை செய்யப்படுகிறது என்று பாகிஸ்தானில் இன்றைய அறிஞர்கள் கூறுகின்றார்கள். பாகிஸ்தானில் தஃப்ஸீரே ஸகீர் தடை செய்யப்பட்டுள்ளது. அதை யாரும் தங்களது வீட்டில் வைத்திருக்க முடியாது. நிச்சயமாக நடந்து கொண்ட இவர்களின் (முன்னோர்களான) மக்கள், பழைய மக்கள் கூறுகின்றார்கள்: இதைப் போன்ற ஒன்று இல்லவே இல்லை. இது புகழத்தக்கது. இதிலிருந்து மனிதன் நிறைய கற்றுக் கொள்ளலாம்.

அல்லாஹ் இன்றைய ஆலிம்களுக்கும் நியாயமான பார்வையுடன் பார்ப்பதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக!

அடுத்து, ஆங்கில திருக்குர்ஆன் விளக்கவுரையின் மார்க்க மற்றும் மொழிப் புலமை சிறப்பானது. ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் உச்சத்தில் இருக்கும் அறிஞர்களைத் தாக்கத்திற்குள்ளாக்கியது. அவர்கள் இதில் சிறப்பான கருத்து தெரிவித்துள்ளார்கள்.

உதாரணமாக, ஒரு புகழ் பெற்ற அறிஞர் A.J. Arbary என்பவர் கூறுகின்றார்: திருக்குர்ஆனின் இந்தப் புதிய மொழியாக்கமும், தஃப்ஸீரும் ஒரு மிகப் பெரிய சாதனையாகும். தற்போதுள்ள ஒரு தொகுதி இந்த சாதனையின் முதல் படியாகும். அவருக்கு ஒரு தொகுதி கிடைத்திருந்தது. அவர் கூறுகின்றார்:

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆய்வு செய்யும் ஆலிம்கள் இந்த மகத்தான பணியை ஆரம்பித்து சுமார் பதினைந்து ஆண்டு காலம் ஆகிவிட்டது. இந்தப் பணி ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்களின் ஊக்கமளிக்கும் தலைமையில் நடைபெற்று வந்தது. பணி மிகவும் உயர்வான வகையாக இருந்தது. திருக்குர்ஆனின் வரிகளுக்கு எத்தகைய ஒரு பதிப்பை வெளியிட வேண்டும் என்றால், அத்துடன் அதற்குரிய மிகச் சரியான ஆங்கில மொழிபெயர்ப்பு இருக்க வேண்டும். மொழியாக்கத்துடன் ஒவ்வொரு வசனத்திற்கும் தஃப்ஸீரும் இருக்க வேண்டும் என்று இருந்தது.

பிறகு கூறுகிறார்: ஆரம்பத்தில் மிர்ஸா பஷீருத்தீன் (ரலி) அவர்கள் தாமே எழுதிய ஒரு நீண்ட முகவுரை உள்ளது. பின்னர், அவர் அந்த முகவுரையில் சில விஷயங்களை எழுதியுள்ளார். பிறகு கூறுகிறார்:

நாம் இந்தப் பணியை இஸ்லாத்தைப் பற்றிய அறிவின் மீதான ஆர்வத்தின் மாபெரும் நினைவுச் சின்னமாக முன்வைத்தால், அது மிகையாகாது. அதைத் தயார்படுத்தும் ஒவ்வொரு கட்டத்திலும் நம்பத் தகுந்த விளக்கவுரை நூல்கள், அகராதிகள் மற்றும் வரலாறு ஆகியவற்றிலிருந்து பயன் பெறப்பட்டுள்ளது. இந்த நூல்களின் நீண்ட பட்டியல் வாசகர்களைத் தாக்கத்திற்குள்ளாக்குகிறது. இதிலிருந்து, இந்த மொழிபெயர்ப்பு மற்றும் தஃப்ஸீரைத் தயாரித்தவர்கள் அனைத்து பிரபலமான அரபி தஃப்ஸீர்களைப் படித்ததோடு மட்டுமல்லாமல் அத்துடன் ஐரோப்பிய கிழக்கத்தியர்கள் விமர்சிக்கும் வகையில் எழுதியதையும்; கருத்தில் கொண்டுள்ளார்கள் என்பது தெரிய வருகிறது. மொழிபெயர்ப்பை மட்டும் பார்த்தாலே மொழியாக்கம் ஆங்கிலப் பிழைகள் இன்றி, மிகுந்த கண்ணியமானது என்றே சொல்ல வேண்டும்.

பிறகு கூறுகிறார்: முஸ்லிம் அல்லாதவர்களின் ஆட்சேபனைளுக்கான மறுப்புகளும் மற்றும் பிற மதங்களைப் பற்றிய தகுந்த விமர்சனமும் இதில் உள்ளது.

முஸ்லிம் அல்லாத வாசகர்களுக்கு இதன் பல பகுதிகள் ஒரு தலைப்பட்சமாக, ஆட்சேபனைக்குரியதாகத் தோன்றலாம். ஆனால், நினைவிருக்கட்டும்! இந்தப் பகுதிகளும் நேர்மையான நோக்கத்துடன் எழுதப்பட்டவை. மிகுந்த கவனத்துடன் படிக்கத்தக்கவை.

பிற மதங்களின் வழக்கத்தில் உள்ள போதனைகள் மீது ஆட்சேபனை செய்யும் இறையச்சமுடைய அறிஞர்களான முஸ்லிம்கள் ஏன் அவ்வாறு செய்கின்றார்கள்? என்று இதிலிருந்து தெரிய வருகிறது.

பின்னர், அமெரிக்காவின் ஆம்ஸ்டர்டாமில் உள்ள North Western பல்கலைக்கழகத்தின் வரலாறு, இலக்கியம் மற்றும் மதத் துறையின் தலைவர் டாக்டர் சார்லஸ் எஸ்.பிரீடன் எழுதுகிறார்:

நூலின் அச்சீடு மிகவும் சிறப்பாக உள்ளது. தட்டச்சும் உயர்தரமானது. எளிதாகப்

படிக்கலாம். மொத்தத்தில் ஆங்கில மொழியில் உள்ள இஸ்லாமிய இலக்கியத்தில் இது ஒரு மதிக்கத்தக்க அதிகரிப்பாகும். இதற்காக உலகம் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு மிகவும் அதிகமதிகமாக நன்றி தெரிவிக்கிறது.

பிறகு, ஒரு புகழ் பெற்ற கிறித்தவப் பத்திரிகையான அந் நஸ்ர் இவ்வாறு எழுதியுள்ளது:

அஹ்மதிய்யா ஜமாஅத் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் கண்டங்களில் இஸ்லாமிய பண்பாட்டின் வெளியீட்டின் மாபெரும் சாதனையை செய்துள்ளது. இந்தப் பணி தொடர்ச்சியாக கொள்கை பரப்புனர்களை அனுப்புவதன் மூலமாகவும், பல்வேறு நூல்கள் மற்றும் பிரசுரங்களை வெளியிடுவதன் மூலமாகவும் நடைபெற்று வருகிறது.

அவற்றின் மூலம் இஸ்லாத்தின் சிறப்புகள் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மைத்துவம் எடுத்துரைக்கப்படுகிறது. நமக்குத் திருக்குர்ஆனின் ஆங்கில மொழியாக்கத்தைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. இந்த மொழியாக்கம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் அவர்களின் கண்காணிப்பின் கீழ் செய்யப்பட்டது. திருக்குர்ஆனின் மொழியாக்கம் பார்வையை ஈர்க்கக் கூடியதாகவும் வாசகர்களுக்குக் கண்களுக்குக் குளிர்ச்சியளிக்கக் கூடியதாகவும் இருக்கிறது.

இந்த மொழியாக்கம் மிகவும் உயர்ந்த சிந்தனைகளைக் கொண்டதாக இருக்கிறது. திருக்குர்ஆனின் வசனங்கள் ஒரு காலமில் - நெடுவரிசையில் எழுதப்பட்டுள்ளன. இன்னொரு நெடுவரிசையில் நேர்நேராக அதன் மொழியாக்கம் தரப்பட்டுள்ளது. அந்தப் புதிய விளக்கங்களை வாசிக்கக் கூடியவர்கள் கிழக்கத்தியர்கள் மற்றும் ஐரோப்பிய எதிரிகளின் ஆட்சேபனைகளுக்கு விளக்கமான பதில் காணக் கிடைக்கிறது.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் அவர்கள் இந்த மொழியாக்கத்துடன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் எழுதியுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது. மேலும், இந்த வாழ்க்கை வரலாறும் மொழியாக்கமும் இணையற்றது.

எவ்வாறு இருப்பினும், தஃப்ஸீரே கபீர், தஃப்ஸீரே ஸகீர் மற்றும் Five Volume Commentry ஆகியவற்றின் மீது இந்தத் திறனாய்வுகள் செய்யப்பட்டுள்ளன. இப்போது நான் சில சொற்பொழிவுகளைப் பற்றியும் எடுத்துக் கூறுகின்றேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் நம் முன் வைத்த சொற்பொழிவுகளில் உள்ள அன்னாரின் அறிவுக் கருவூலத்தைக் கூறுகின்றேன். அவற்றை அந்நியர்களும் புகழ்ந்திருக்கின்றார்கள். எந்தக் கண்ணோட்டத்தில் அவற்றைப் பார்த்தார்கள் என்பதைப் பற்றி எடுத்துக் கூறுகின்றேன்.

அன்னாரது ஒரு சொற்பொழிவு புதிய அமைப்பு என்பதாகும். புதிய அமைப்பு என்ற தலைப்பில் அன்னார் அந்நியர்களுக்கு முன்னால் அந்த சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். அதை குறித்து திறனாய்வு செய்தவாறு எகிப்தின் புகழ் பெற்ற அறிஞரும் ஆசிரியருமான அப்பாஸ் மஹ்மூத் அல்அஃகாது என்பவர் அந்த மாபெரும் உரையின் ஆங்கில மொழியாக்கம் வெளியிட்ட போது, எகிப்தின் புகழ் பெற்ற மொழி வளம் மிக்க இதழான அர் ரிஸாலாவில் கீழ் வருமாறு திறனாய்வு செய்துள்ளார்:

இந்த சொற்பொழிவை படிப்பதனால், அறிஞரான சொற்பொழிவாளர் (மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மது (ரலி) அவர்கள்) உலகளாவிய அமைப்பின் கவனத்தை இந்த விஷயத்தின் பால் ஈர்த்து இருக்கின்றார் என்பது வெளிப்படுகிறது. அதாவது, வறுமை மற்றும் ஏழ்மையின் கஷ்டத்தை அகற்ற வேண்டும் அல்லது மற்ற சொற்களில் கூறுவதாயின் ஓரிடத்தில் ஒன்று கூடி இருக்கக் கூடிய செல்வங்களை அனைத்து உலகங்களின் சமுதாயங்கள் மற்றும் மக்கள் மத்தியில் பங்கு போட்டு விநியோகிக்க வேண்டும். சந்தேகம் இன்றி, அன்னார் அதாவது சொற்பொழிவாளர் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மது அவர்கள் பாசிசம், நாசிசம், கம்யூனிசம் (பொதுவுடைமை) மற்றும் இதர பிற குடியரசு அமைப்புகள் ஆகிய இந்தக் கஷ்டங்கள் மற்றும் சிரமங்களை அகற்றுவதற்கு தீர்வு காண்பதற்கு முயற்சி செய்த உலகம் முழுவதிலும் உள்ள அனைத்துப் புதிய அமைப்புகளுக்கும் கூறியுள்ளார்கள். அந்த அனைத்து அமைப்புகள் பற்றியும் எல்லாத் திசையிலிருந்தும் முழுமையான தகவலும் ஞானமும் அன்னாருக்கு இருந்தது என்பது வெளிப்படையாகும்.

வெறுமனே எழுதிவிடவில்லை. இந்தப் புதிய இயல்களைப் பற்றி அன்னாருக்கு தெரிந்தும் இருந்தது. மிகவும் ஆழமான ஞானம் இருந்தது. பிறகு அத்துடன் அந்த பத்திரிகை கூறுகிறது:

ஆனால், அத்துடன் அவர்கள் கொண்டிருக்கக்கூடிய இந்தக் கொள்கை முற்றிலும் சரியானதாகும். அதாவது, அரசியல்வாதிகள் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் அரசாங்கங்கள் ஆகியவற்றால் இந்த பிரச்சனைக்குத் தீர்வு காண முடியாது. எனவே இத்தகைய பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்காக ஆன்மிக ஆற்றலின் தேவை இருக்கிறது.

ஏனெனில், எல்லா மனிதர்களுடனும் தொடர்புடையதாக இருக்கும், ஒவ்வொரு பிரச்சனைக்குமான தீர்வு மற்றும் சிகிச்சையை எல்லா மனிதர்களும் இணைந்து தான் செய்ய முடியும். எனவே எல்லாவற்றையும் விட முக்கியமான, மன நிறைவு ஏற்படுத்தக்கூடிய நல்ல பணிகள் மற்றும் சீர்திருத்தங்களுக்காக துணிச்சல் ஏற்படுத்தக்கூடிய விஷயம், கொள்கை மற்றும் நம்பிக்கையாகும். அதை அலட்சியப்படுத்த முடியாது. இதற்குப் பிறகு அவர்கள் இந்தியாவில் இருக்கக் கூடிய பெரும் பெரும் மார்க்கங்கள் மீது குறிப்பாகவும், உலகத்தில் இருக்கக்கூடிய மற்ற மார்க்கங்கள் மீது பொதுவாகவும் ஓர் ஆய்வு பார்வையை செலுத்தியிருக்கின்றார்கள்.

உலகம் தீயக் கண்ணோடு பார்க்கக்கூடிய அந்தக் கடினங்களை அகற்றுவதற்காக அவர்கள் முன்வைக்கின்ற அந்தச் சிகிச்சையை அவர்களிடமிருந்து கேட்க வேண்டும் என்பதற்காகவும், தற்போது இருக்கக்கூடிய அமைப்புக்குப் பதிலாக அவர்களால் முன்வைக்க முடிந்த புதிய அமைப்பைப் பற்றியும் அவர்களிடம் கேட்க வேண்டும் என்பதற்காகவும் அன்னார் இவ்வாறு செய்தார்கள். ஏனென்றால், இந்த பிரச்சனைக்குத் தீர்வு காண்பதும், இந்தக் கஷ்டத்தை அகற்றுவதும் அவர்களது கடமையும் ஆகும்.

இதற்கு பிறகு அந்தப் பத்திரிக்கை எழுதுகிறது: இதற்குப் பிறகு, அவர்கள் இந்த விஷயத்திற்கான பல ஆதாரங்களை முன் வைத்துள்ளார்கள். அதாவது, அந்த அனைத்து மார்க்கங்களில் இஸ்லாம் மட்டுமே எப்படிப்பட்ட மார்க்கம் என்றால், அது தனக்குள் அந்தப் பிரச்சனைகளுக்கான தீர்வை வழங்குவதற்கான ஆற்றல் படைத்துள்ளது. மேலும், அனைத்து சமுதாயங்களாலும் அனைத்து மக்களாலும் முன்னரும் அதன் படி அமல் செய்ய முடிந்திருந்தது. இந்த நிகழ் காலத்திலும் அமல் செய்ய முடியும்.

இதற்குப் பிறகு, மஹ்மூதுல் காதிர் ஸாஹிப் அவர்கள் புதிய அமைப்பின் அந்தப் பகுதியின் சுருக்கத்தைத் தமது சொற்களில் கூறியுள்ளார். அவர் கூறுகின்றார்: வேறு சொற்களில் கூறினால், அறிஞர் சொற்பொழிவாளர் அவர்கள் நாம் மேலே கூறிய வரிகளில் மிகவும் சுருக்கமாகவும், சைகையாகவும் கூறிய அந்த மார்க்கக் கொள்கைகளுக்கு நிகராக ஒப்பிட்டுக் கூறுவதில் மட்டுமே எந்தக் குறையும் விட்டு வைக்கவில்லை. அதற்கும் மேற்பட்டு அவர் நீளமான ஒரு விளக்கத்தையும் வழங்கியிருக்கின்றார். நான் அதனைப் படிக்கவில்லை. எவ்வாறு இருப்பினும் அவர் கூறுகின்றார்:

அதற்கும் மேற்பட்டு அன்னார் சிறப்பாக அவற்றில் ஆழமான பார்வையை செலுத்தி இருக்கின்றார்கள். மேலும் சிறப்பான ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளார்கள். ஏனெனில், அன்னார் கூறியதுபோன்று கொள்கை மட்டுமே எப்படிப்பட்ட விஷயம் என்றால், அதன் மூலமாக சீர்திருத்திற்கான நம்பிக்கையை வைக்க முடியும்.

அன்னார் அந்தக் கொள்கைகளோடு போட்டியிட்டு ஒப்பிட்டுக் கூறியதோடு மட்டுமல்லாமல் அந்த அனைத்து அரசியல் மற்றும் சமூக அமைப்புகளுக்கு எதிராக இந்த விஷயத்தை நிரூபித்தார்கள். அதாவது, அவை அனைத்தும் செயல் ரீதியாகவும், ஆன்மிக ரீதியாகவும் தமது குறிக்கோள்களில் தோல்வியைத் தழுவின.

அதற்குப் பிறகு அரசியல் மற்றும் சமூக அமைப்புகளை உள்ளடக்கிய புதிய அமைப்பின் அந்தப் பகுதியின் சுருக்கத்தை அவர் கூறினார். பிறகு இவர் கூறுகிறார்: ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் ஆங்கிலம் அறிந்த வர்க்கத்தில் இந்த ஓசை பரப்பப்பட்டால் இன்னும் கூறுவதாயின் சுயமே இந்தியர்கள் மத்தியிலும் கிழக்கத்தியர்கள் மத்தியிலும் கூட பரப்பப்பட்டால் தனது தாக்கத்தை காட்டும்.

பிறகு, முஸ்லிம்களிடம் கருத்து வேறுபாட்டின் ஆரம்பம் என்ற அன்னாரின் ஒரு சொற்பொழிவு உள்ளது. அன்னார் Modern Historical Society -ன் கூட்டத்தில் லாஹூர் இஸ்லாமியா கல்லூரியில் அந்த சொற்பொழிவை ஆற்றினார்கள். இந்த சொற்பொழிவு எந்த அளவு அறிவுப்பூர்வமானதாகவும், இஸ்லாமிய வரலாற்றை முழுமையாக அறிந்த வண்ணமும் இருந்தது என்றால், பெரும் பெரும் வரலாற்று அறிஞர்கள் கூட அன்னாருக்கு முன் தம்மைப் பள்ளிக்கூடத்தின் சிறுவர்களாக கருத ஆரம்பித்துவிட்டனர்.

ஹுஸைர் அவர்களின் ஆய்வின் சுருக்கம் இதுவாகும். அன்னார் நிரூபித்துக் காட்டினார்கள். இங்கு சுருக்கத்தை எடுத்துரைக்கின்றேன். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் இதர ஸஹாபிகளும் ஒவ்வொரு குழப்பம் மற்றும் குறையை விட்டும் தூயவர்களாக இருந்தார்கள்.இன்னும் கூறுவதாயின் அவர்களின் நடைமுறை மிகவும் உயர் நல்லொழுக்கத்தை

வெளிப்படுத்தக் கூடியதாக இருந்தது. நன்மையின் உயர் தரத்தில் அவர்களிடம் தடம் பதிந்திருந்தது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஆகட்டும்! ஸஹாபிகள் ஆகட்டும்! யார் மீதும் பழி சுமத்த முடியாது. பிறகு கூறினார்கள்:

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத்தில் ஸஹாபிகளுக்கு எந்த ஆட்சேபனையும் இருக்கவில்லை. அவர்கள் கடைசி நொடி வரை நன்றியுணர்வுடன் செயல்பட்டார்கள். பிறகு, ஸஹாபிகள் கிளர்ச்சி செய்தார்கள் என்பது தவறான அவதூறாகும் என்பதை அன்னார் (ரலி) நிரூபித்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், ஹஸ்ரத் தல்ஹா (ரலி), மற்றும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி), ஆகியோர் மீது குழப்பம் விளைவிக்க அவர்கள் இரகசியமாக செயல்பட்டார்கள் என்ற பழியும் முற்றிலும் தவறானது ஆகும். இதையும் அதில் அன்னார் (ரலி) நிரூபித்தார்கள்.

அன்ஸாரி ஸஹாபிகள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மீதும் கோபமாக இருந்தார்கள் என்று அவதூறு சுமத்தப்படுகிறது. அது தவறாகும். ஏனெனில், அன்ஸார் சகோதரர்களின் தலைவர்கள் அனைவரும் அந்தக் குழப்பத்தை அகற்றுவதில் முழுமையாக ஈடுபட்டிருந்தார்கள் என்பதை நாம் பார்க்கின்றோம். எவ்வாறு இருப்பினும், இதைக் குறித்த அந்நியர்களின் தாக்கங்கள் இவ்வாறு உள்ளன:

லாஹூர் இஸ்லாமிய கல்லூரியின் பேராசிரியர் ,ஸய்யிது அப்துல் காதிர் எம் ஏ அவர்கள் எழுதுகின்றார்கள்:

அறிஞரான தந்தையின் அறிஞரான மகன். இந்த சொற்பொழிவு மிகவும் அறிவுப்பூர்வமானது என்பதற்கு ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மது அவர்கள் புகழ் பெற்றிருப்பது மிகப் பெரிய சான்றாகும்.

அவர் கூறுகின்றார்: மனித வரலாற்றைப் பற்றி எனக்கும் அதிகம் தெரியாது. என்னால் வாதிட்டுக் கூற முடியும். முஸ்லிம்களாகட்டும் முஸ்லிம் அல்லாதவர்களாகட்டும் மிகக் குறைவான வரலாற்றாசிரியர்களால் மட்டுமே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளின் ஆழத்தை சென்றடைய முடிந்தது. மேலும், அழிவை ஏற்படுத்திய முதல் உட்பூசல்களின் அசல் காரணங்களைப் புரிவதில் வெற்றி பெற்றனர். உட்பூசலுக்கான காரணிகளைப் புரிந்து கொள்வதில் மட்டும் ஹஸ்ரத் மிர்ஸா ஸாஹிப் அவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை. அதற்கும் மேற்பட்டு அவர்கள் மிகவும் தெளிவான மற்றும் தொடர்ச்சியான கோணத்தில் இந்த நிகழ்வுகளை எடுத்துரைத்துள்ளார்கள். அந்த விஷயங்களின் காரணமாகவே, கிலாஃபத் கட்டடம் நீண்ட காலம் வரை அசைவிற்குள்ளாகியிருந்தது.

எனது கருத்துப்படி, இஸ்லாமிய வரலாற்றில் ஆர்வம் கொண்டிருக்கக்கூடிய மக்களின் பார்வை இத்தகைய ஆதாரப்பூர்வமான கட்டுரையை ஒருபோதும் கடந்திருக்காது. உண்மை என்னவென்றால், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தைப் பற்றி, எந்த அளவு அசல் இஸ்லாமிய வரலாறுகளைப் படிப்போமோ அந்த அளவே இந்தத் தலைப்பு பாடம் கற்பிக்கக்கூடியதாகவும் மதிக்கத்தக்கதாகவும் இருக்கும்.

இன்னும் பல கருத்துகள் உள்ளன. ஆனால், அனைத்தையும் எடுத்துரைப்பதற்கு நேரமில்லை. பிறகு, இஸ்லாத்தின் பொருளாதார அமைப்பு பற்றிய ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் ஒரு சொற்பொழிவு இருந்தது. அது லாஹூரில் இரண்டரை மணி நேரம் வரை தொடர்ந்தது. இதில் அஹ்மதி மக்கள் மட்டுமின்றி நூற்றுக்கணக்கான எண்ணிக்கையில் இன்னும் சொல்வதாயின் சில இடங்களில் எழுதப்பட்டுள்ளது: ஆயிரக்கணக்கில் முஸ்லிம்களும் முஸ்லிம் அல்லாத கண்ணியத்திற்குரிய மக்களும் கலந்து கொண்டார்கள். கல்வி பயின்ற மக்களாக இருந்தார்கள்.

அஹ்மதி அல்லாத முஸ்லிம்களும், முஸ்லிம் அல்லாத மற்ற மக்களும் இருந்தார்கள். அவர்களின் பெரும்பான்மை உயர்தர கல்வி பயின்ற வர்க்கத்தைச் சேர்ந்தவராகவும், பஞ்சாப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களைக் கொண்டதாகவும் இருந்தது. சொற்பொழிவு ஆற்றும்போது பேராசிரியர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் இதர அறிஞர் சகோதரர்கள் அதிகதிகமாக குறிப்பு எடுத்துக் கொண்டே இருந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் பொருளாதார அமைப்பின் சாராம்சத்தை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்: தனி மனித சுதந்திரம் மற்றும் அரசாங்கத்தின் தலையீடு ஆகியவற்றின் ஒரு பொருத்தமான கலவையின் பெயரே இஸ்லாமிய பொருளாதாரம் என்பதாகும். சுதந்திரமும் இருக்க வேண்டும். அரசாங்கத்தின் தலையீடும் இருக்க வேண்டும். ஆனால், இவை ஒன்றோடொன்று பொருத்தமான முறையில் இணைந்திருக்க வேண்டும். Coordinate செய்ய வேண்டும். அதாவது, உலகிற்கு முன் இஸ்லாம் எடுத்து வைக்கக் கூடிய பொருளாதார அமைப்பில் ஓரளவு அரசாங்கத்தின் தலையீடும் வைக்கப்பட்டுள்ளது. மக்களுக்கும் ஓரளவு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இவை இரண்டும் பொருத்தமான முறையில் கலப்பதற்கே இஸ்லாமிய பொருளாதாரம் என்று பெயராகும்.

தனிப்பட்ட சுதந்திரம் வைக்கப்பட்டதன் காரணம் இதுதான். அதாவது, மக்கள் தமக்கான மறுமைக்கான சேகரிப்பை ஒன்று திரட்டிக் கொள்ள வேண்டும். அவர்களுக்குள் ஒருவரையொருவர் முந்துதல் மற்றும் போட்டியிடும் ஆன்மா முன்னேற்றம் அடைய வேண்டும். உலகத்தோடு போட்டியிடுவது மட்டும் அல்ல. மாறாக மறுமைக்காக நன்மைகளை செய்து முன்னேறிச் செல்லுதல் மற்றும் நன்மையில் முன்னேறுவதற்கான போட்டியும் தொடர வேண்டும். பிறகு கூறினார்கள்:

அரசாங்கத்தின் தலையீடு ஏன் வைக்கப்பட்டுள்ளது? என்றால் செல்வந்தர்களுக்கு தமது ஏழை சகோதரர்களைப் பொருளாதார ரீதியில் அழிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்து விடக் கூடாது. ஆக, மனித குலத்தை அழிவில் இருந்து பாதுகாத்து வைப்பதைப் பொருத்தவரை அரசாங்கத்தின் தலையீடும் அவசியமாகக் கருதப்பட்டுள்ளது. மேலும், ஒருவரையொருவர் முந்துதல் மற்றும் மறுமை வாழ்விற்கான வாழ்வாதாரத்தை சேமிப்பதைப் பொருத்த வரை தனி மனித சுதந்திரம் நிலை நாட்டப்பட்டுள்ளது.

தனி மனித சுதந்திரத்தை நசுக்குவதற்கு பதிலாக அது முழுவதுமாக பாதுகாக்கப்பட்டுள்ளது. எனவே, இஸ்லாமிய பொருளாதாரத்தில் தனி மனித சுதந்திரமும் முழுமையாக பாதுகாக்கப்பட்டுள்ளது. அப்போதுதான் மனிதன் விருப்பமான தொண்டுகளை ஆற்றுவதன் மூலமாக மறுமை வாழ்விற்கான ஏற்பாட்டை செய்து கொள்ள முடியும். மேலும், ஒருவரையொருவர் முந்துதலுக்கான ஆன்மா முன்னேற்றம் அடைந்து அறிவு முன்னேற்றத்தின் களத்தை நிரந்தரமாக விசாலமாக்க முடியும். அரசாங்கத்தின் தலையீடும் நிலை நாட்டப்பட்டுள்ளது. அப்போதுதான் தனி மனித பலவீனத்தின் காரணமாக பொருளாதாரங்களின் அடிப்படை அநீதி மற்றும் நீதியின்மை மீது நிலைபெறாமல் இருக்கும். மேலும், மனித குலத்தின் எந்தப் பகுதியின் வழியிலும் தடையாக இருக்காது.

ஹுஸூர் அவர்கள் தமது சொற்பொழிவின் இரண்டாவது பகுதியில், மார்க்க பொருளாதாரம், அரசியல் கண்ணோட்டங்கள் மற்றும் செயல் ரீதியாக கம்யூனிச திட்டத்தை விரிவாக ஆய்வு செய்தார்கள். கடைசியில், அது தொடர்பான பைபிளின் ஒரு மாபெரும் முன்னறிவிப்பின் உருது வாசகத்தை எடுத்துக் கூறிய பிறகு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் தம்முடைய முன்னறிவிப்புகளையும் எடுத்துக் கூறினார்கள்.

சுருக்கமாக, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் இந்த சொற்பொழிவு உச்சத்தில் இருக்கக்கூடிய அறிஞர் வர்க்கங்களிலும் ஒரு பரபரப்பை ஏற்படுத்தி விட்டது. அல்லாஹ்வின் அருளினால் அதற்கு ஒவ்வொரு மட்டத்திலும் அசாதாரணமான வெற்றி கிடைத்தது. இந்த சொற்பொழிவை வருகை தந்திருந்தவர்கள் எந்த அளவு ஆர்வத்தோடு கேட்டார்கள் என்றால் அவ்வளவு நீண்ட நேரம் வரை மக்கள் தமது தலையில் பறவைகள் அமர்ந்திருப்பது போன்று அங்கு அமர்ந்திருந்தார்கள். இரண்டரை மணி நேரம் தொடர்ச்சியாக சொற்பொழிவு ஆற்றினார்கள். ஒரு பேராசிரியரோ இந்த சொற்பொழிவைக் கேட்டு அழ ஆரம்பித்துவிட்டார். கம்யூனிசத்துக்கு ஆதரவாக இருந்த சில மாணவர்கள் நாங்கள் இஸ்லாத்தின் சோசியாலிசத்தை பொதுவுடைமைக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டோம். இப்போது அதை சரியானதாகவும் பொருத்தமானதாகவும் ஏற்றுக் கொள்கிறோம் என்ற சிந்தனையை வெளிப்படுத்தினார்கள்.

பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் துறையின் முதுகலை மாணவர்கள் ஹுஸூர் அவர்களின் இந்த சொற்பொழிவு சம்பந்தமாக தமது இந்த ஆசையை வெளிப்படுத்தினார்கள். இதன் ஆங்கில மொழியாக்கம் அச்சிடப்பட்டு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் துறையின் பேராசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அந்தக் காலத்தில் ஆங்கிலேயேர்களின் அரசாங்கம் இருந்தது. பெரும்பாலும் ஆங்கிலேயே பேராசிரியர்கள் இருந்து வந்தார்கள்.

அவர்கள் இதையும் கூறினார்கள்: இந்தியாவின் எதிர்கால முன்னேற்றம் மற்றும் மேம்பாட்டுக்காக மற்ற மக்கள் தரப்பிலிருந்து பல்வேறு திட்டங்கள் முன்வைக்கப்படுகின்ற அதேவேளையில் ஹுஸூர் அவர்கள் முன்வைத்துள்ள இந்த இஸ்லாமிய அமைப்பு முஸ்லிம்களின் சிந்தனைகளுக்கு பிரதிநிதித்துவம் வகிக்கும்.

இந்த சொற்பொழிவுக்கு உயர் நீதிமன்றத்தின் வழக்கறிஞர் மிஸ்டர் ராம் சந்த் மச்சிந்தா ஸாஹிப் அவர்கள் தலைமை வகித்தார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: எழுதக்கூடியவர் இவ்வாறு எழுதுகின்றார்:

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 30 March 2023 Issue No. 13

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

இந்த கம்பீர மிக்க சொற்பொழிவுக்குப் பிறகு மாநாட்டின் தலைவர் ஜனாப் லாலா ராம் சந்த் மச்சிந்தா ஸாஹிப் அவர்கள் ஒரு சுருக்கமான உரை நிகழ்த்தினார். அவர் கூறுகின்றார்:

இப்படிப்பட்ட ஒரு சொற்பொழிவைக் கேட்பதற்கான வாய்ப்பு கிடைத்ததற்கு நான் என்னை நற்பேறு பெற்றவனாகக் கருதுகின்றேன். அஹ்மதிய்யா அமைப்பு முன்னேற்றம் அடைவதைக் கண்டு எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. மிகவும் சிறப்பாக முன்னேற்றம் அடைந்து கொண்டே செல்கிறது. தற்போது நீங்கள் கேட்ட சொற்பொழிவிற்குள் மிகவும் விலை உயர்ந்த மற்றும் புத்தம் புதிய விஷயங்களை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள். எனக்கு இந்த சொற்பொழிவின் மூலம் அதிக பயன் கிடைத்தது.

நீங்களும் இந்த விலைமதிப்பற்ற தகவல்களில் இருந்து பயனடைந்திருப்பீர்கள் என்று நான் கருதுகின்றேன். இந்த மாநாட்டில் முஸ்லிம்கள் மட்டுமல்லாமல் முஸ்லிம் அல்லாதவர்களும் கலந்து கொண்டுள்ளார்கள் என்பதாலும் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். பிறகு, கூறுகின்றார்:

இஸ்லாம் தனது சட்ட திட்டங்களில் முஸ்லிம்களை மட்டுமே கவனத்தில் கொள்கிறது. முஸ்லிம் அல்லாதவர்களை கவனத்தில் கொள்வதில்லை என நான் முன்னர் தவறாக எண்ணியிருந்தேன். ஆனால், இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவரின் உரையிலிருந்து இஸ்லாம் எல்லா மனிதர்களிடத்தும் சமமாக நடந்து கொள்வது குறித்தே போதனை வழங்குகிறது எனத் தெரிய வந்துள்ளது. எனக்கு இதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. நான் முஸ்லிம் அல்லாத நண்பர்களிடம் இப்படிப்பட்ட இஸ்லாத்திற்கு கண்ணியம் அளிப்பதில் உங்களுக்கு என்ன இருக்கிறது? எனக் கேட்பேன் என்றார்.

தாங்கள் அனைவரும் எந்த அளவு கண்ணியமான முறையிலும் அமைதியுடனும் இரண்டரை மணிநேரம் வரை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களின் சொற்பொழிவைக் கேட்டீர்கள் என்றால், யாராவது ஓர் ஐரோப்பியர் இதைப் பார்த்திருந்தால் இந்தியா இவ்வளவு முன்னேற்றம் அடைந்து விட்டதா! என்று வியந்து போயிருப்பார்.

அடுத்து, மக்களின் கருத்துகளை எழுதக்கூடியவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

சொற்பொழிவைக் கேட்ட பிறகு, பெரும்பாலான மக்களின் நாவில் புகழ்பாடும் சொற்கள் இருந்தன. இன்னும் சொல்வதென்றால், ஒரு பெரும் தரப்பினர் இந்த விஷயத்தை ஒப்புக் கொண்டு கூறினர். கொள்கைளின் களத்தில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மது அவர்களோடு எமக்கு கருத்து வேறுபாடு உள்ளதுதான். ஆனால், எங்களது கொள்கை மாறுபட்டது. இவர்கள் கொண்டிருக்கும் கொள்கையை நாங்கள் ஏற்பதில்லை. ஆயினும், இந்த உண்மையை நிராகரிக்க முடியாது.

கொள்கை மாறுபட்டு இருந்தாலும் கூட இந்த விஷயத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். கூறுகிறார்கள்: அன்னார் தற்காலத்தில் இந்தியாவின் சிறந்த அறிஞர் ஆவார்கள் என்ற இந்த உண்மையை நாம் மறுக்க முடியாது.

உண்மையும் இதுவாகவே இருந்தது.

பொருளாதார அறிவைப் பற்றி திருக்குர்ஆனின் அறிவாழங்கள் மற்றும் இறை ஞானங்களின் கண்டுபிடிப்பு மற்றும் ஐரோப்பிய பொருளாதாரத்தின் தத்துவத்திற்கு மறுப்பு இன்று வரை எந்த ஒரு மனிதன் தரப்பிலிருந்து இந்த வகையில் முன் வைக்கப்படவில்லை. அதாவது, இஸ்லாத்தை மறுப்பவர்கள் கூட இத்தகைய அமைப்பின் சிறப்பை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். மேலும், சுயமே கம்பயூனிசத்திற்கு ஆதரவளிப்பவர்கள் ஏற்றுக் கொள்ளும் நிர்பந்தத்திற்கு ஆளாகி விட்டார்கள்.

மவ்லவி ஷேர் அலீ ஸாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: சொற்பொழிவுக்குப் பிறகு, அஹ்மதி அல்லாத சில இளைஞர்கள் தங்களுக்குள் இவ்வாறு உரையாடிக் கொண்டிருப்பதைக் கேட்டேன்: இப்பொழுதும் கூட நீங்கள் கம்யூனிஸ்ட் அல்லது கம்யூனிசத்திற்கு ஆதரவளித்தால் உங்கள் மீது சாபமே! மேலும் இதேபோன்று ஒரு பேராசிரியர் இதைக் கேட்டு அழுதுவிட்டார். இது ஏற்கனவே கூறப்பட்டது.

சொற்பொழிவின் இறுதியில், அஹ்மதி அல்லாத பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தரப்பிலிருந்து இந்த ஆசை வெளிப்படுத்தப்பட்டது: அதாவது, நேரம் குறைவின் காரணமாக ஹுஸூர் அவர்களால் தமது சொற்பொழிவில் கட்டுரையின் அனைத்து அம்சங்களிலும் தமது சிந்தனைகளை வெளிப்படுத்த முடியாமல் போனது. எனவே இன்னொரு சொற்பொழிவு ஆற்ற வேண்டும். அதில் கட்டுரையின் மற்ற பகுதிகள் விளக்கமாக கூறப்பட வேண்டும். அப்போதுதான் அல்லாஹ் ஹுஸூர் அவர்களுக்கு வழங்கியுள்ள அந்த ஞானங்களின் ஊற்றிலிருந்து மக்கள் வயிராற நீர் அருந்த முடியும்.

அக மற்றும் புற ஞானங்களால் நிரப்பப்படுவார். லாஹூர் இஸ்லாமியக் கல்லூரியின் துணை தலைமை ஆசிரியர் ஸய்யத் அப்துல் காதிர் சாஹிப் எம்.ஏ அவர்கள், இவர் வரலாற்று பிரிவின் தலைவர் ஆவார். கூறுகிறார்கள்: இஸ்லாமியக் கல்லூரி இஸ்லாம் மற்றும் கம்யூனிஸம் என்ற தலைப்பில் லாஹூரின் சன்ரைஸ் என்ற பத்திரிகையில் அவர் ஒரு குறிப்பை எழுதியிருந்தார். அதன் சிறு பகுதி இதுவாகும். எழுதுகின்றார்:

இஸ்லாத்தின் பொருளாதார அமைப்பு மற்றும் கம்யூனிஸம் என்ற தலைப்பில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது ஸாஹிப் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவைக் கேட்பதற்கான பெருமை எனக்கு கிடைத்தது.

அன்னாரது ஏனைய சொற்பொழிவுகளைப் போன்று இந்த சொற்பொழிவையும் கேட்பதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. அது அறிவார்ந்த சிந்தனைகளில் பிரகாசத்தை ஏற்படுத்தக் கூடிய முழுமையான தகவல்களால் நிரம்பியதாக இருந்தது.

மிர்ஸா ஸாஹிப் அவர்கள் இறைவனால் வழங்கப்பட்ட திறமைகளுக்கு சொந்தக்காரர் ஆவார்கள். இந்த தலைப்பின் எல்லா அம்சத்திலும் அன்னார் முழுமையான தேர்ச்சி பெற்றிருந்தார்கள். எந்தப் பட்டமும் பெற்றிருக்கவில்லை. எந்த ஆராய்ச்சியும் செய்யவில்லை. ஆனால், அல்லாஹ் கற்றுக் கொடுத்தான். இதன் காரணமாக, அன்னாரது சிந்தனைகள், நாம் அவற்றிற்கு மதிப்பளித்துப் பார்த்தவாறு அவற்றின் மீது கவனம் செலுத்துவதற்குத் தகுதியானவையாகும்.

(தொடர்ச்சி... அடுத்த இதழில்)

முதல்பக்கத் தொடர்ச்சி... (துப்ஸீரே கபீர்)

எண்ணங்களில் மேலோங்கி இருக்கின்றது. அதற்காகவே அன்னார் (ஸல்) துன்பங்களை சுமந்து கொண்டிருக்கின்றார்கள். ஒருவேளை அவர் கவிஞராக இருந்திருந்தால் அவருக்கு எந்த நோக்கமும் இருந்திருக்காது. மக்களின் பெரும்பான்மை எதன் பக்கம் இருக்குமோ அதன் பக்கமே அவரது எண்ணமும் இருந்திருக்கும். மேலும் மக்களை மகிழ்விப்பதற்கு முயற்சி செய்திருப்பார். ஆனால் அவர் முழு உலகையும் எதிரியாக்கிக் கொண்டார். ஒவ்வொருவரையும் ஏகத்துவத்தின் பக்கம் கொண்டு வர முயற்சி செய்கின்றார் அவ்வாறிருக்க அவர் எப்படி கவிஞராக ஆகிவிட்டார்?

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 7, பக்கம் 302 - 304, காதியான் பதிப்பு 2010)

* * * * *

**National Watch Company**



B. Mohamed Adil
93632 06679
99433 38000

Sales & Service

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT 99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad